செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௪௮] வள்ளுவர் ஆண்டு ௨00௫, ஆடி (Aug. '74) [பரல்-௧௨

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. 'சித்தாந்த கலாநிதி', உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எஸ்ஸி
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிப்
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி.ஏ. (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு.

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

பேராசிரியர்

தி. செல்வக் கேசவராய முதலியார் எம்.ஏ.

எழுதிய நூல்கள்

திருவள்ளுவர்	1 60	அக்பர்	1 50
கண்ணகி சரித்திரம்	1 80	இராபின்சன் குரூசோ	0 80
தமிழ் வியாசங்கள்	2 00	ஆசாரக் கோவை	1 25
தமிழ் - (கட்டுரை)	2 50	முதுமொழிக் காஞ்சி	1 00
வியாச மஞ்சரி	1 60	அறநெறிச்சாரம்	1 00
கலிங்கத்துப் பரணி கதா சங்கிரகம்	1 25	பஞ்சலட்சணம் (ஐந்திலக்கணம்)	2 00
அபிநவ கதைகள்	1 60		

மேற்கண்ட நூல்கள் கழகத்தில் கிடைக்கப்பெறுவன

தாயுமான அடிகள் திருப்பாடல்கள்

தாயுமான அடிகளின் திருப்பாடல்கள் அனைத்தும் அழகிய கையடக்கப் பதிப்பாக பிளாஸ்டிக் உறையுடன் வெளிவந்துள்ளது.
5 00

செந்தமிழ்ச் செல்வி
உறுப்பினர்கட்கு வேண்டுகோள்

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் 'செந்தமிழ்ச் செல்வி'யின் உறுப்பினராயிருந்து ஆதரவு தந்து வருவதற்கு நன்றி. செல்வியின் நடப்பு ஆண்டுக் கையொப்பம் 13-8-'74 இல் முடிவுறுகிறது. எனவே 49 ஆம் சிலம்பிற்குரிய கையொப்பத் தொகையினை விரைவில் அனுப்பி வைத்துத் தங்களின் உறுப்பினர்ப் பதிவைப் புதுப்பித்துக் கொள்வீர்களென எதிர்பார்க்கிறோம். 12-9-74க்குள் தங்களிடமிருந்து கையொப்பத்தொகை வராவிடில், தங்கள் ஆதரவை எதிர்நோக்கிச் செல்வி 49ஆம் சிலம்பின் முதல் இதழை விலைபெறு அஞ்சல் (V. P. P.) மூலம் அனுப்பி வைக்கலாம் எனக் கருதுகிறோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தாள் விலை, அச்சுக் கூலி ஏற்றங்களால் கையொப்பத் தொகையினைக் கூட்டவேண்டியதாயிற்று.

வாழ்நாள் உறுப்பினர் கட்டணம்	ரூ 120	00
ஆண்டுக் கையொப்பம்	ரூ 10	00
இலங்கை மற்றும் வெளிநாடுகள்	ரூ 15	00

அன்புள்ள,
வ. சுப்பையா,
ஆட்சியாளர்.

செந்தமிழ்ச் செல்வி

உறுப்பினராக வேண்டுகோள்

[illegible]

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சஅ	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦டு, ஆடி ஆகஃச்டு 1974	பரல் கஉ

கழகம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புப் பணி

(சு)

மறைமலையடிகள் நூல்நிலையமும் கலைமன்றமும் உருவான வரலாறு

(நடந்த வண்ணம் உரைத்தல்)

தமிழ்மலை மறைத்திரு மறைமலையடிகள் 15—9—1950இல் அம்மை அம்பலவாணர் திருவடி சேர்ந்தபின், அவர்கள் ஆராய்ந்த தமிழ் சமற்கிருதம் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலுள்ள நாலாயிரம் நூல்கள் 'மறைமலையடிகள் நூல்நிலைய'மாகவும் பல்லாவரத்தில் அவர்கள் தாமே கட்டி வாழ்ந்த வளமனை கலைமன்றமாகவும் கழகத்தால் எவ்வாறு அமைக்கப் பெற்றன என்ற குறிப்பு கழகம் வெளியிட்ட புலவர் அரசு அவர்கள் எழுதிய 'மறைமலையடிகள்' என்ற நூலிலும், மறைத் திருநாவுக்கரசனுர் எழுதிய மறைமலையடிகள் வரலாறு என்னும் விரிவான நூலிலும் எழுதப் பெறவில்லை. ஆனுல் அவை எங்ஙனம் ஏற்பட்டுள்ளன எவ்வாறு மக்கட்குப் பயன்படுகின்றன என்பது தமிழக வரலாற்றில் இடம்பெறவேண்டுமென்பது எனது அவா. ஆகவே அவை தோன்றிய வரலாற்றை இங்கே விளக்கி எழுதுகின்றேன்.

மறைமலையடிகளார் கடுமையான நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருப்பது 7—9—1950இல் யான் நெல்லை

யிலிருந்து சென்னைக்கு வந்ததும் தெரியலானேன். அன்று மாலையில் பல்லாவரம் சென்று அடிகளார் நோயினால் தாங்கொணாத் துன்புறும் நிலையினைக் கண்டு கண்ணீர் பெருக, மனம் மிக வருந்தலானேன். மறுநாள் அடிகளாரின் அன்பிற் குகந்த திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் என்னைப் பார்க்க விரும்பி ஆள்வழிச் சொல்லியனுப்பினர். அப்போது அவர்கள் கண் அறுவை மருத்துவஞ் செய்யப்பெற்று வீட்டிலேயே தங்கியிருந்தனர். அடிகளார் நோயுற்று வருந்துவது அவர் களுக்குத் தெரிந்திருந்தது. "அடிகளார் தமது ஆராய்ச்சிக்குத் தொகுத்து வைத்திருக்கும் நூல்களைப் பற்றியும் எழுதி அச்சிட்டும் அச்சிடப் பெருமலும் வைத்திருக்கும் நூல்களைப் பற்றியும் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இதுகாறும் ஏற்பாடொன்றும் செய்யாதிருப்பின் தாமே அடிகளாரைக் கேட்டு அவர்கட்குப்பின் அவை தமிழ் மக்கட்குப் பயன்படுவதற் குரிய ஏற்பாட்டினைச் செய்யுந் தகுதியும் திறமையும் தம்மிடமே இருக்கின்றன. ஆதலால் அடிகளாரிடம் கேட்டு ஆவன செய்யும்" என்று கூறினார்கள்.

1950 மே 24 இல் அடிகளார் மனைவியார் திருவாட்டி சவுந் தரம் அம்மையார் உயிர் நீத்தனர். அடிகளாரும் தமது பிறந்த நாட்குறிப்பினைக் கொண்டு தம்முடைய வாழ்நாள் 75 ஆவது அகவையில் முடிவுறும் என்று எழுதி வைத்திருக்கின்றனர். எனவே, தம்முடைய நூல்களைப் பற்றித் தக்க ஏற்பாடு செய்தல் வேண்டுமென்று இரண்டு மூன்று திங்களாகவே என்னிடம் நேரிலும் கடிதவழியும் தெரிவித்தனர். ஆனால் ஏற்பா டொன்றும் செய்யத் துணிந்தார்களில்லை. என்னிடமுள்ள நேர்மை, உண்மை, ஊக்கமுடைமை, வணிகத்திறமை ஆகிய வற்றை நன்கு அறிந்து என்பால் மிக்க நம்பிக்கை வைத்திருக் கின்றனர் என்பது மட்டும் தெரியலானேன்.

அவர்கட்கு அப்போது மருத்துவஞ் செய்து வந்தவர் அவர் களோடு நீண்டகாலமாக நட்புக் கொண்டிருந்த சித்த மருத் துவர் பண்டிதர் ஆனந்தம் ஆவர். 8—9—1950 காலையில் தியாகராய நகரிலுள்ள அவரது மருத்துவமனைக்குச் சென்று அடிகளார் நோயைப் பற்றிக் கேட்டேன். "உயர்ந்த கத்தூரி வாங்கி அனுப்புங்கள். மூச்சுத் திணறல் நீங்கவும் நெஞ்சுப் பைக்கு வலிவூட்டவுங்கூடிய மருந்து செய்து கொண்டு மாலை 4 மணிக்குப் பல்லாவரம் வருவேன். அப்போது அடிகளார் தம் நூல்களைப் பற்றி என்ன ஏற்பாடு செய்திருக்கின்றனர் என்று கேட்போம்" என்று சொன்னார். அவர் விரும்பியபடி உயர்ந்த கத்தூரி வாங்கி அனுப்பி வைத்தேன்.

யான் மாலை 4 மணிக்குப் பல்லாவரம் சென்றேன். பண்டிதர் ஆனந்தர் தம் மகன் ஆனந்த குமாரனுடன் 5 மணிக்கு வந்தனர். தாம் கொண்டு வந்த மருந்தினைத்தேனில் குழப்பிக் கொடுத்தனர். யாங்கள் இருவருமே அடிகளாரிடம் விருப்ப ஆவணம் ஏதாவது எழுதியுள்ளீர்களா? எனக் கேட்டோம். 'எழுதவில்லை; இப்போதே எழுதுங்கள்' என்றனர். அதன் கண் எழுத வேண்டிய குறிப்புக்களைக் கேட்டுக் குறித்துக் கொண்டேன். அடிகளார் கையெழுத்துப் போல ஆனந்த குமாரன் கையெழுத்து இருக்குமாதலால் அவரை மெத்தைக்கு அழைத்துக் கொண்டுபோய் விருப்ப ஆவணம் எழுதப் பெற்றது. அதனை அடிகளாரிடம் படித்துக் காட்டவே அவர்கள் கையெழுத்திட்டனர். அதன்கண் குறித்தபடி பண்டிதர் ஆனந்தர், தமியேன், அடிகளார்க்கு நீண்டகாலமாகத் தொண்டு செய்து வந்த அன்பர் அ. கனகராயர் ஆகிய மூவருமே செயற்குழு உறுப்பினர்கள் ஆனோம். அதன்கண் யானும் பண்டிதர் ஆனந்தரும் சாட்சிக் கையெழுத்துப் போட்டுவிட்டோம்.

மறுநாள் கழக வழக்குரைஞர் திரு. வி. இராசகோபால முதலியார் அவர்களிடம் விருப்ப ஆவணத்தைக் காட்டியதும் "செயற்குழு உறுப்பினர்கள் சாட்சிக்கையெழுத்துப் போட்டமையினால் அது செல்லுபடியாகாது, வேறொன்று எழுத வேண்டியதுதான்" என்றனர். என் மனம் இடிந்து போயிற்று. அந்த ஆவணத்தில் திரு அ. கனகராயருக்கு 'மனிதவசியம்' என்ற நூலின் உரிமையும் மாளிகை விற்றுவரும் பணத்தில் ஓராயிர ரூபாவும் கொடுத்தல் வேண்டும் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

அடுத்து வேறு விருப்ப ஆவணம் எழுத வேண்டுமானால் திரு. கனகராயரைக் கொண்டுதான் எழுத முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது. அடிகளார் குடும்பத்தினர் யாவரும் அவரிடம் அன்பாய்ப் பழகுவார்கள். வேறு ஆவணம் எழுதச் சொன்னபோது நாலைந்து ஆண்டுகளாக அடிகளாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த சைதை ந. ரா. நடராசன் (ஆடலரசு), அவருடைய தம்பி ந. ரா. சுந்தரராசன் (முருகவேள்) தேவாரம் ந. நடராசன் (கூத்தரசு), என் தமையனார் மருமகன் க. சொக்கலிங்கம் (கழக மேலாளர்) ஆகிய நால்வரும் முதலில் எழுதப் பெற்ற ஆவணத்திற் கண்ட மூவரோடு செயற்குழுவிலே சேர்க்கப் பெற்றனர்.

திரு. கனகராயர் "எனக்கு 'மனிதவசியம்', 'அம்பிகாபதி அமராவதி' 'அறிவுரைக் கொத்து,' 'அரை குறையாக அச்சிடப் பெற்ற திருக்குறளாராய்ச்சி' ஆகிய நான்கு நூல்களின்

உரிமையினைத் தருவதாக முன்பே என்னிடம் அடிகளார் சொல்லியிருந்தார்கள். அங்ஙனம் சேர்த்துக் கொள்ள விரும்பினால் வேறு எழுதி அடிகளாரிடம் கையெழுத்து வாங்கித் தருகிறேன்'' என்று சொன்னார். அதற்கு யான் இணங்க வேண்டியதாயிற்று.

அடிகளார்க்கு அவர் நீண்ட நாளாகத் தொண்டு செய்து வந்ததும், அடிகளார் நூல்களைக் கடனுக்கு வாங்கி விற்று வந்ததும், அவரிடம் மிக்க நம்பிக்கை வைத்திருந்ததும் அடிகளார் அவருக்கு எழுதிய இரண்டு கடிதங்களால் தெரிந்து கொள்ளலாம்.

25—3—1941இல் எழுதிய கடிதம்

அன்புள்ள கனகராயர்க்கு,

......நலமாகுக. நேற்றுமுந்தி உங்கட்கு உடம்பு நலமில்லை என்று கேட்டது முதல், உளம் மிக வருந்தி அன்றிரவு முழுதும் உறக்கத்திலேயும் நம் அம்மை அப்பரை வேண்டியபடியாய் இருந்தேன். அதன்பயனாக மறுநாளே உங்கட்கு உடம்பு நலம் அடைந்ததென்பது தெரிந்து மகிழ்ந்தேன். இரண்டு திங்கள் நல்ல மருந்து உட்கொண்டு அந் நோயை வேரறத் தொலைத்து விடுங்கள். உங்கள் உடம்பின் நலத்தைச் செவ்வையாய்ப் பாருங்கள்.

பெரிய கடிகாரம் மறுபடியும் நின்று போய்விட்டது. ஆதலால் அதனைக் கழற்றிக் களிம்பும் துருவும போகச் செவ்வையாய்த் துடைத்து அதனை இயக்கத் திறமான ஒருவரை உடனே அழைத்து வாருங்கள். மணிக்கட்டுக் கைக்கடிகாரமுங் கொண்டு வாருங்கள்.

18—1—43 இல் எழுதிய கடிதம்

அன்புமிக்க கனகராயர்க்கு,

நீங்கள் உங்கள் அன்னையார், மனைவியுடன் வருவதாகச் சொன்னபடி வருவீர்களென்று இதுகாறும் எதிர்பார்த்தும் வரவில்லை.

கழகத்தில் "தொண்டைமண்டல சதகம்", "பாண்டி மண்டல சதகம்", "கம்பர் பாடிய சடகோபரந்தாதி", "கம்பர் ஏர் எழுபது", "திருக்கை வழக்கம்", "சங்கர சோழன் உலா", "விக்கிரம சோழன் உலா", "குலோத்துங்கன் கோவை", "இராமாநுச நூற்றந்தாதி", "இராமாநுஜாய திவ்ய சரிதை", "குருபரம்பரை" என்னும் நூல்களை வாங்கி வாருங்கள். ஆராய்ச்சிக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொள்வேன்.

இவை போன்று நூற்றுக்கணக்கான கடிதங்கள் திரு. அ. கனகராயர்க்கு அடிகளார் எழுதியுள்ளனர். இவற்றால் அவர்பால்

அடிகளார் எத்துணை அன்பும் நம்பிக்கையும் வைத்திருந்தனர் என்பது நன்கு விளங்குகின்றதன்றோ? எனவே திரு கனகராய ராற்றான் இரண்டாவது விருப்ப ஆவணம் எழுதி அடிகளாரிடம் கையெழுத்து வாங்க முடியும் என்று யான் கருதியது சரிதானே. முதலில் எழுதிய ஆவணத்தில் தவறு நேர்ந்துவிட்டது என்று சொல்லி இரண்டாவது ஆவணம் எழுதி அதன்கண் அடிகளாரிடம் கையெழுத்து வாங்கிவிட்டனர். சைதை ஆடலரசு நண்பர் மூவர் சாட்சிக் கையெழுத்திட்டுள்ளனர். அந்த விருப்ப ஆவணம் அடியிற் காண்க.

ஆசிரியர் மறைமலை அடிகளாரின் விருப்ப ஆவணம்

"ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒன்பதாந் தேதி செங்கற்பட்டு சில்லா, சைதாப்பேட்டை தாலுக்கா, பல்லாவரத்தில் சாவடித் தெருவிலுள்ள பொதுநிலைக் கழக மாளிகையில் குடியிருக்கும் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த காடம்பாடி சொக்கநாத பிள்ளை புதல்வர் நூலாசிரியத் தொழில் செய்யும் மறைமலை அடிகள் என வழங்கும் சுவாமி வேதாசலம் என்கிற நான், என் வயது முதிர்ச்சிக் காலத்தில் உணவு ஏலாமையினாலும் மார்பில் சளிபிடித்து மூச்சுவிட முடியாமலிருப்பதாலும் இறப்பு நேரக்கூடுமென அஞ்சி நல்ல நினைவும் தெளிவுமிருக்கிற போது எழுதிவைத்த உவில் சாசனம் என்ன என்றால் :—

இப்பவும் நான் என்னுடைய கீழ்க்கண்ட எண்ணங்களை நிறைவேற்றுவதற்குத் தியாகராயநகர்-ராகவையா வீதியிலுள்ள பண்டிட் எஸ். எஸ். ஆநந்தம் பிள்ளை 1, பாளையங்கோட்டை-வயிரமுத்துப் பிள்ளை புதல்வர் திரு. சுப்பையா பிள்ளை 2, வேளாளத்தேனாம் பேட்டை-பார்த்தசாரதி தெரு, 29-ம் எண்ணுள்ள இல்லத்தில் குடியிருக்கும் சி. அண்ணாசாமி முதலியார் புதல்வர் திரு. கனக ராயர் 3, நந்திபுரம் திரு தி. ராமசாமி முதலியார் புதல்வர் திரு நடராசன் 4, சைதாப்பேட்டை ஜோஸ்யர் தனக்கோட்டி முதலியார் புதல்வர் திரு. நடராசன் 5, நந்திபுரம் தி ராமசாமி முதலியார் புதல்வர் திரு. சுந்தரராசன் 6, புலியூர் குறிச்சி கந்தசாமி பிள்ளை புதல்வர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை 7, ஆகிய ஏழுபேரையும் மதிப்பு (கௌரவ) உறுப்பினர்களாகக் கொண்ட செயற்குழு (எக்சிகியூட்டிவ் கமிட்டி) ஒன்றை ஏற்பாடு செய்திருக்கின்றேன். அச் செயற்குழுவே அடிக்கடி கூடிக் கீழ்க்கண்ட என் எண்ணங்களை நிறைவேற்றி வைக்கவேண்டும். யான் என் சொந்த முயற்சியினால் தேடி என்வசம் வைத்துள்ள சொத்துக்களின் விவரமும் கீழே தரப்பட்டுள்ளன. என்னுடைய எண்ணங்கள் :—

1. யான் படிப்பதற்கும் நூல் எழுதுவதற்கும் வாங்கி என் மாளிகையில் தொகுத்து வைத்திருக்கும் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலுள்ள நூல்கள் அடங்கிய என் மணி மொழி நூலகத்தை அவை இருக்கும் பதினொரு நிலைப்பேழைகளுடன் (பீரோக்கள்) சென்னையிலுள்ள திருநெல்வேலித் தென்

னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகக் கிளை நிலையத்தாரிடம் அவர்கள் இசைவார்களானால் ஒப்படைத்து அதை அவர்கள் "மறைமலை அடிகளார் நூல்நிலையம்" எனும் பெயரால் அவர்கள் செலவிலேயே பொதுமக்கள் இலவசமாக வந்து படிக்கும்படி சென்னையிலேயே தகுதியான இடத்தில் வைத்து நடத்தும்படி செய்யவேண்டும். அடிக்கடி குழுவினர் அதை மேற்பார்த்துக் கொள்ளவேண்டும்.

2. (1) என்னுடைய பொதுநிலைக் கழக மாளிகையை விற்பனை செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் குழுவினர் தக்கபடி என்னுடைய பணத்தில் செலவு செய்து, நல்ல விலைக்கு விற்பனை செய்து, அதன்வழிக் கிடைக்கும் தொகையில் ரூபா ஐயாயிரத்தை நிதியாக வைத்து, நான் பூசித்துவந்த அம்பலவாணர், நால்வர் திருவுருவங்கட்குப் பூசை முதலியவற்றை அதன் வருவாயைக் கொண்டு குழுவினரில் ஒருவரான திரு. த. நடராசன் அவர்களைக் கொண்டே ஊதியம் கொடுத்து நடத்திவர வேண்டியது. அம்பலவாணர், நால்வர் வழிபாட்டைக் கூடுமானவரையில் என்னுடைய மாளிகையிலேயே நடத்திக் கொண்டு வந்து அதற்குப் பிறகு அத் திருவுருவங்களைச் சைதாப்பேட்டைத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தாரிடமும் தகுந்த நினைவுக்குறிகளும் இடமும் மேற்பட்டுத் தகுதியெனப்பட்டால் அங்கேயும் வைத்து நடத்திவர வேண்டியது. திரு. த. நடராசன் அவர்கட்குப் பின்னர் அவ் வழிபாடுகளைக் குழுவினரே தக்க ஏற்பாடுகள் செய்து நடத்திவர வேண்டியது.

2. (2) மாளிகை விற்பனைத் தொகையில் மற்றும் ஓராயிரம் ரூபாயை என்னிடத்தில் மிகவும் அன்பு பூண்டு பல ஆண்டுகளாய்த் தொண்டு செய்துவந்த குழுவில் ஒருவரான திரு. கனகராயருக்கு வழங்கிவிட வேண்டும்.

2. (3) மாளிகை விற்பனைத் தொகையில் உள்ள மிகுதியை மூன்று பாகமாக்கி, ஒரு பாகத்தை என் இரண்டாம் மனைவி பொன்னம்மாளும் அவர்களின் குழந்தைகளும், மற்றொரு பாகத்தை என் மூன்றும் மனைவி கண்ணம்மாளும் அவர்கள் குழந்தைகளும், அடையச் செய்து, பிறிதோர் பாகத்தை மீண்டும் மூன்று பாகமாக்கி அதில் இரண்டு பாகத்தை என் புதல்வன் வே. மாணிக்கவாசகமும், மற்றொரு பாகத்தை என் புதல்வன் வித்துவான் வே. திருநாவுக்கரசும் அடையும்படி செய்ய வேண்டியது. என் புதல்வர்களில் வே. சுந்தரமூர்த்திக்கு நான் கொடுத்த ஆயிரம் கடனை அவர் திருப்பிக் கொடுக்காததால் அதைத் தள்ளி விடுகின்றேன். திரு. வே. சுந்தரமூர்த்தி வசதியுடையவராக இருப்பதாலும் என் மூத்த புதல்வர் வே. திருஞானசம்பந்தன் வெளிநாட்டிற்குப் போய்ப் பல்லாண்டு ஆனமையாலும் அவர்கள் இருவருக்கும் ஏதும் கொடுக்க வேண்டுவதில்லை.

2. (4) திரு. பொன்னம்மாள், திரு. கண்ணம்மாள் குடும்பங்கள் அடைய வேண்டிய பொருளைத் தக்க ஊதிய நிலையத்தில் வைத்துக் குழுவினர் ஏற்றபடி அவர்களுக்குப் பயன்படுத்த வேண்டியது.

(1) என்னுடைய நூல்களில் "அம்பிகாபதி அமராவதி". "மனிதவசியம்", "அறிவுரைக்கொத்து", அரைகுறையாக எழுதியுள்ள திருக்குறள் ஆராய்ச்சி, ஆகியவற்றைத் திரு. கனகராயருக்குக் காப்பிரைட்டாகத் தந்துவிட்டு மிகுதியுள்ள நூல்கள் அனைத்தையும் அச்சிட்டு வெளியிடும் உரிமையைத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கே கொடுத்து அவர்கள் வெளியிடும் என் ஒவ்வொரு நூலுக்கும் ராயல்டியாக நூற்றுக்கு இருபது விழுக்காடு ஆறு திங்களுக்கொரு முறை பெற்று அதில் நூற்றுக்கு ஐந்து பங்கைப் பொதுநிலைக் கழகத்திற்கு என ஒதுக்கிவிட்டு மிகுதியை 2 (3) பிரிவில் காட்டியபடி பொன்னம்மாள் கண்ணம்மாள், வே. மாணிக்கவாசகர், வே. திருநாவுக்கரசு ஆகியவர்கட்கும் அவர்களுக்குப் பின் அவரவர் வாரிசுகட்கும் ரொக்கமாகப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டியது.

3. (2) ஒவ்வொரு முறையும் நான் ஏற்படுத்தியுள்ள குழுவினரின் இசைவு பெற்றே மேற்படி நூற்பதிப்புக் கழகத்தார் என் நூல்களை வெளியிடவேண்டும் மேற்படி கழகத்தார் மேற்கண்ட ஏற்பாடுகளுக்கு இசையா விட்டால் இசையும் வேறு அமைப்புக்களுக்கும் குழுவினர் நூல்களை வெளியிடக் கொடுக்கலாம்; குழுவினர் தமது முயற்சியில் பொருள் தொகுத்துப் பொதுநிலைக் கழகப் பெயராலேயும் வெளியிடலாம்.

3. (3) அரசாங்க விதிகளின்படி ராயல்டி உரிமை எவ்வளவு காலத்திற்கு உண்டோ அவ்வளவு காலம் வரையிலும் அதைப் பெற்று 3 (1) பிரிவில் கண்டபடி உரியவர்களுக்குக் கொடுத்து வரவேண்டும். உரிமையுடையோர் வாரிசு அற்றுப் போனால் அத்தொகை பொதுநிலைக் கழகத்தைச் சேரவேண்டியது.

4. (1) யான் இதுகாறும் முழுதாக அச்சிட்டுள்ள நூல்களை நூற்றுக்குப் பதினைந்து விழுக்காடு கழிவுக்கு விற்பனை செய்யும்படி மேற்படி நூற்பதிப்புக் கழகத்தாரிடமே கொடுத்து அதனால் கிடைக்கும் பணத்தையும் 3 (1) பிரிவில் கண்டபடி உரியவர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டியது.

4. (2) அரைகுறையாக அச்சிட்டுள்ள நூல்களை முடித்துத் தக்கபடி விற்பனை செய்யும் ஏற்பாட்டைக் குழுவினரே செய்ய வேண்டியது.

5. (1) நான் ஏற்படுத்தியுள்ள குழுவினரே பொதுநிலைக் கழக நிர்வாகிகளும் ஆவார்கள் அவர்கள் பொதுநிலைக் கழகச் சார்பில் ஆண்டுதோறும் என் நினைவு நாளையும், கழக ஆண்டு விழாவையும் பொருள் நிலைக்குத் தக்கவாறு விடாமல் நடத்திவர வேண்டியது. மற்றப்படி அக் கழகத்தைத் தக்கவாறு வளர்க்கும் பொறுப்பை என் கொள்கைகளையும் கருத்துக்களையும் நன்கு அறிந்த குழுவினர்க்கே விட்டு விடுகின்றேன்.

5 (2) குழுவினர் தக்க விதிகளைத் தமக்குள் ஆராய்ந்து முடிவு செய்து கொண்டு வேண்டியபோதெல்லாம் கூடிப்பேசி நல்ல முடிவுகளைச் செய்து செயலாற்றி வரவேண்டியது. குழு உறுப்பினர்களில் எவரேனும் இறந்து விட்டால் அவரிடத்தில் வேறு தக்கவர்

ஒருவரை மற்றவர் எல்லோரும் ஒன்றுபட்டுச் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

5. (3) பாங்கியிலும் பண்டாபீசிலும் என்பேரால் உள்ள பணத்தை வாங்கும் அதிகாரமும் மேற்படி குழுவினருக்கே உண்டு. அவர்கள் அதைப் பெற்று அதில் ஒரு தக்க தொகையை வீட்டை விற்பனை செய்வதற்கான சில்லறைச் செலவுகளைச் செய்ய ஒதுக்கிக் கொண்டு மிகுதியைப் பொதுநிலைக் கழக வளர்ச்சிக்கென வைத்துக் கொள்ள வேண்டியது.

சொத்து விவரம் : 1. பல்லாவரத்தில் யான் இப்போது குடியிருந்துவரும் மாளிகையும் தோட்டமும் அதிலுள்ள தாவர சங்கம சொத்துக்களும். 2. என்பேரால் பாங்கியிலும் பண்டாபீசிலும் உள்ள பொருள்களில் திரு பொன்னம்மாள், கண்ணம்மாள் இவர்களுக்கு மாற்றிவிட்ட தொகையும் யான் வாங்கிய கடனும் போக உள்ள மிகுதிப்பணம். 3. யான் எழுதி அச்சிட்டு விற்பனைக்கு வைத்து இருக்கும் நூல்கள் 4. யான் எழுதி அச்சிட்டு இப்போது அச்சில் இல்லாமல் இருக்கும் நூல்கள். 5. யான் எழுதி அச்சிடாமல் கையெழுத்துப்படியிலுள்ள நூல்கள் 6 யான் படிப்பதற்கும் நூல் எழுதுவதற்கும் வாங்கி வைத்திருக்கிற ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருத நூல்களும் அவை இருக்கும் பதினொரு நிலைப் பேழைகளும்.

இந்தப் படிக்கு நான் நல்ல நினைவும் தெளிவும் இருக்கிற போது எழுதிவைத்த உவில் சாசனம் (will) இது என் வாழ் நாளுக்குப் பின் நடைமுறைக்கு வரவேண்டியது.

(ஒப்பம்) சுவாமி வேதாசலம்

சாட்சிகள் :

1. சு. பாலசுந்தரம், 2. வை. அழகப்பன் என்கிற சுந்தரம், 3. க. மா. தங்கவேல்.

இதனை எழுதியது ஆனந்தகுமார்.

முதல் ஆவணம் எழுதும்போது ஒன்பது பங்குகளில் தம் மகன் வே. மாணிக்கவாசகத்துக்கு மூன்றும், பொன்னம்மாள் குடும்பத்துக்கு மூன்றும், கண்ணம்மாள் குடும்பத்துக்கு மூன்றும் கொடுத்தல் வேண்டுமென்று அடிகளார் சொன்ன போது யான் தங்கள் மகன் வே. திருநாவுக்கரசுக்கும் பிள்ளைகள் மிகுதியாய் இருக்கின்றனர். அவருக்கு ஒரு பங்கும், வே. மாணிக்கவாசகத்துக்கு இரண்டு பங்குகளும் கொடுப்பது நல்லதென்றேன். அடிகளாரும் அதற்கிசைந்தனர்.

முதல் ஆவணத்தில் குறிப்பிடப் பெறுமல் உள்ள பகுதிகள் திரு. ஆடலரசு தூண்டுதலால் இரண்டாவது ஆவணத்தில் சேர்க்கப்பெற்றுள்ளன. அவற்றைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

பத்தி 3. 1 அடிக்கடி குழுவினர் அதை (நூல்நிலையத்தை) மேற்பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

பத்தி 8. 3 (1) என்னுடைய நூல்களில் ''அம்பிகாபதி அமராவதி'', ''மனித வசியம்'', ''அறிவுரைக் கொத்து'', ''அரைகுறையாக எழுதியுள்ள திருக்குறள் ஆராய்ச்சி'' ஆகியவற்றைத் திரு. கனகராயருக்குக் காப்பி ரைட்டாகத் தந்துவிட்டு,

பத்தி 12. 4 (2) அரைகுறையாக அச்சிட்டுள்ள நூல்களை முடித்துத் தக்கபடி விற்பனை செய்யும் ஏற்பாட்டைக் குழுவினரே செய்ய வேண்டியது.

அடிகளார் பிரிவு

அடிகளார் 15-9-1950 (பிள்ளையார் சதுர்த்தியன்று) பிற்பகல் 3-30 மணிக்கு அம்மை அம்பலவாணர் திருவடி சேர்ந்தனர். அன்று காலை 11 மணிக்கு யானும் கழகத் தலைவர் திரு. மு. காசி விசுவநாதன் செட்டியாரும் வாடகை இயங்கியில் பல்லாவரத்துக்குப் போயிருந்தபோது அடிகளார் மூச்சுவிடமுடியாமல் திணறிக்கொண்டு துன்புறும் நிலையினைக் கண்டு கண்ணீர்மல்க வருந்தினோம். அடிகளார் மக்களெல்லாரும் சூழ்ந்திருந்தனர். வே. திருநாவுக்கரசும் குலசையிலிருந்து வந்துவிட்டனர். யான் அவர்களெல்லாரும் கேட்கும் வகையில் ''அடிகளார் விருப்ப ஆவணம் எழுதியுள்ளனர். அவர்கள் பிரிவுக்குப்பின் அது வெளியிடப்பெறும்'' என்று சொன்னேன். அதனைக் கேட்டதும் மக்கள் மாணிக்கவாசகரும், திருநாவுக்கரசும், மகள் திரிபுரசுந்தரியும் (முந்நகரழகி) தாங்கொணாத் துன்புறும் நிலையிலிருக்கும் அடிகளார் முன்பு நின்று எங்கட்குப் பெருந் தீங்கு செய்து விட்டீர்களே என்று நெஞ்சிலும் முகத்திலும் அடித்துக் கொண்டு கூக்குரலிட்டனர். என்னையும் வாயில் வந்தபடி தரக்குறைவாக ஏசினர். தம் மக்கள் பேசிய கொடிய மொழிகள் அடிகளார்க்கு எத்துணை வருத்தம் விளைவித்திருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமோ ?

யானும் தலைவரும் இயங்கியில் சென்னைக்குத் திரும்பும் போது ஆவணத்தைத் தான் பார்க்க வேண்டுமென்று திருநாவுக்கரசு எங்களோடு வந்தனர். மகள் முந்நகரழகி தெருப்பக்கம் வந்து பெருஞ்சினத்துடன் மண்ணை வாரி விட்டார். வரும் வழியில் ஆவணம் என்னிடமில்லை என்று சொன்னேன்.

சென்னையில் எனது வீட்டில் மூவரும் உணவு உண்டபின் திருநாவுக்கரசு பல்லாவரத்துக்குப் போய் விட்டனர். சிறிது நேரத்தில் அடிகளார் இறையடி சேர்ந்தனர் என்ற செய்தி தொலை பேசிவழி எனக்கு அறிவிக்கப்பட்டது. பிள்ளையார் சதுர்த்தியாதலால் அன்று அப்பர் அச்சகத்துக்கு விடுமுறை.

எனினும், அடிகளார் பிரிவு எந்த நேரத்திலும் நிகழ்தல் கூடும் என்று கருதி அச்சுப் பொறி இயக்குநர், துடைப்பாளன், அச்சுக் கோப்பாளன், காவலன், எழுத்தர் ஆகிய ஐவரையும் அச்சகத்திலே இருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தேன். துண்டறிக்கையும் சுவரொட்டியும் அச்சுக் கோக்கப்பெற்று நேரம் மட்டும் குறிக்கப் பெறாமல் வைக்கப் பெற்றிருந்தன. 16—9—50 மாலை 4 மணிக்கு எரியூட்டுதல் நடைபெறும் என்ற குறிப்புடன் அச்சிட்டேன். சொல்ல வேண்டிய நெருங்கிய நண்பர்கட்குத் தொலைபேசிவழியும் கம்பி வழியும் தெரிவித்தேன். துண்டறிக்கையினைக் கழகப் பணியாளர்களின் வழி பரப்பச் செய்தேன் சுவரொட்டிகளை முக்கியமான இடங்களிலும் தாம்பரம் வரை இரயில் நிலையங்களிலும் ஒட்டச்செய்தேன். சென்னைக் காவல் துறை மேலதிகாரி வழிப் பல்லாவரம் காவல்நிலைய மேலருக்குச் செய்தி தெரிவித்து, யான் அடிகளாரை எரியூட்டுவதற்குச் செய்யும் ஏற்பாடுகட்கு யாரும் இடையூறுகள் செய்யாதிருக்கும் வண்ணம் பாதுகாப்பு கொடுக்கும்படி வேண்டினேன். அன்று செய்தி இதழ்களிலும் வானொலியிலும் அடிகளாரின் பிரிவுச் செய்தி வெளியிடப் பெற்றது. பிரிவு பற்றிய விரிவான குறிப்புகள் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 25 பரல் 2இல் காண்க.

27—9—1950இல் உயர்நீதி மன்றத்தில் அடிகளார் வீட்டிலுள்ள பேழைகள், அவற்றிலுள்ள புத்தகங்கள், கட்டில், மேசை நாற்காலிகள் முதலிய பொருள்களையெல்லாம் குறிப்பிட்டுப் பட்டி எழுதுவதற்குக் கமிஷனர் ஒருவரை நியமிக்கும்படி கொடுக்கப் பெற்ற விண்ணப்பம் உயர்நீதி மன்ற நடுவர் மதிப்புமிகு W. S. கிருட்டிணசாமி நாயுடு அவர்களிடம் வரவே அவர்கள் வழக்குரைஞர் ஏ. வி. ஆவுடைநாயகம் பிள்ளை அவர்களைக் கமிஷனராக நியமித்தனர். 29—9—50இல் காலை 6-30 மணிக்கே கமிஷனரை அழைத்துக் கொண்டு பல்லாவரத்துக்குச் சென்றேன். பேழைகள், அவற்றிலுள்ள நூல்கள், கட்டில், மேசை, நாற்காலிகள் முதலிய பொருள்களை யெல்லாம் எடுத்தெழுதி முடிப்பதற்கு இரவு 9 மணி ஆயிற்று. ஒன்றிரண்டு பேழைகளில் சில தட்டுக்கள் வெறுமையாக இருந்தன. கட்டடஞ் செய்து விற்பனைக்கு வைத்திருந்த நூல்களும் Book of knowledge என்ற தலைப்பிலுள்ள நூற்றொகுதிகளும் 1899 முதல் எழுதி வைத்திருந்த நாட் குறிப்புக்களும் காணப்பெறவில்லை.

கட்டடஞ் செய்யப்பெற்ற நூல்களும் நாட்குறிப்புக்களும் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு அ. கனகராயர் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டன எனப் பின்னர்த் தெரியவந்தது. கட்டடஞ்செய்து விற்பனைக்குரிய நூல்களைக்-

கழகத்துக்கே விற்பனை செய்து வைத்திருக்கின்றனர். அடிகளார் ஒரு சில புத்தகங்களை மட்டுமே அவரிடம் விற்பனைக் குக் கொடுத்துவைப்பது வழக்கம். மிகுதியான நூல்களோ மிகுதியானபடிகளோ வேண்டுமெனின் அவர் பல்லாவரம் போய் வாங்கி வந்து கொடுப்பர். அங்ஙனமிருக்க அடிகளார் பிரிவுக் குப்பின் பெருந்தொகைக்கு அடிகளார் நூல்களைக் கழகத்துக்குக் கொடுத்திருக்கின்றனர். அவ்வாறு விற்றதற்குரிய கணக்கினை அனுப்புமாறு கேட்டதற்குக் கொடுக்க மறுத்துவிட்டார் திரு கனகராயர். தமதலுவலகத்திலே அடிகளார் நாட்குறிப்புக்களி லிருந்து குறிப்புக்கள் எழுதி வருதலை நேரிற் பார்த்ததாக என் நண்பர் திருமயிலை சி. வி. சம்புலிங்கம் அவர்கள் சொன்னார்கள். காவல்துறை வழியால் அவற்றை யான் பெற முயல்வது அவருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. உடனே அவற்றை வேறிடத்துக்கு அனுப்பிவிட்டார். ஆனால் அவர் குறிப்புக்களை எடுத்தெழுதியமையால் அவை அவர் 1957இல் பதிப்பித்த 'மறைமலையடிகளார் கடிதங்கள்' என்ற நூலுள் 39, 40, 41ஆம் பக்கங்களில் காணப்படுகின்றன. எனவே அடிகளார் நீண்ட காலமாக நம்பிக்கை வைத்திருந்த தொண்டர் கனகராயரின் பொருந்தாச் செயல்களை மேலும் விளக்க வேண்டியதில்லை. வழக்கில் அடிகளார் குடும்பத்தார்க்கு ஒருகால் வெற்றி கிடைப் பின் அதனாலும் தாம் தகுந்த ஊதியம் பெறலாம் என்ற கெட்ட நோக்கத்தோடு அவர் நடந்து வந்திருக்கின்றனர் என்பது நன்கு புலனாகின்றது.

அடிகளார் எழுதிய விருப்ப ஆவணத்தைத் திரு வே. மாணிக்கவாசகம், திரு வே. சுந்தரமூர்த்தி, திருவாட்டி திரிபுர சுந்தரி ஆகியோர் ஒப்புக்கொள்ள மறுத்து விட்டனர். திரு வே. திருநாவுக்கரசு முதற்கண் ஒப்புக்கொண்டு பின்பு தம் உடன் பிறந்தார்கட்காக மறுக்க வேண்டியவரானார்.

ஆவணத்திற் கண்டபடி ஒப்படைப்பு (Probate) கோரி உயர்நீதிமன்றத்தில் T. O. S. 2 of 1951 எண்ணுள்ள வழக்குப் பதிவு செய்யப்பட்டது. 9—7—1953இல் உயர்நீதிமன்ற நடுவர் மதிப்புமிகு கே. இராமசாமி கவுண்டர் அவர்கள் முன் வழக்கு ஆராய்ச்சி (விசாரணை) க்கு எடுக்கப் பெற்றது. 5 நாட்கள் வழக்கு நடைபெற்றது. மதிப்புக்குரிய டாக்டர் மு. வரதராசனார் சான்றுரை வழக்கு வெற்றி பெறுவதற்கு ஆதரவு நல்கியது. 20—7—1953இல் விருப்ப ஆவணம் அடிகளாரால் நல்ல நினைவோடு எழுதப் பெற்றதெனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

அந்தத் தீர்ப்பின்மேல O. S. A. No 143 of 1953 எண் ணுள்ள மேல் முறையீட்டு வழக்கு (appeal) பதிவு செய்யப்

பட்டது. 1957 ஏப்ரல் 18, 23, 24 ஆகிய மூன்று நாட்களும் உயர்நீதிமன்றத் தலைமை நடுவர் மதிப்புமிகு பி. வி. இராச மன்னர், நடுவர் ஏ. எஸ். பி. ஐயர் ஆகியோர்முன் வழக்கு ஆராயப்பெற்று 30—4—1957இல் முன்னைய தீர்ப்பு ஒப்புக் கொள்ளப் பெற்றது. 1—8—1957இல் விருப்ப ஆவணத்தின் படி செயற்குழுவினர்க்கு உரிமை (probate) வழங்கப் பெற்றது.

செயற்குழுவினர் சார்பில் வழக்குரைஞர் உயர்திரு வி இராச கோபால் முதலியாரவர்களே தொடர்பாக வழக்கை நடத்தினர்.

மேல் முறையீட்டு வழக்கு ஆராய்ச்சிக்கு எடுப்பதற்கு முன்பே 9—4—1957இல் வள்ளல் இராமலிங்க அடிகள் முதன் முதல் பேசிய சென்னை இலிங்கிச்செட்டித் தெரு 105 ஆம் எண்ணுள்ள சோமுசெட்டியார் இல்லம் விற்பனைக்கு வருவது தெரிந்து ரூ 52,000 விலை பேசி, ரூபா ஆயிரம் முன்பணம் கொடுக்கப் பெற்றது. 25—4—1957இல் அவ்வில்லத்தைக் கழகத்துக்கு விலைக்கு வாங்கிப் பத்திரம் பதிவு செய்யப் பெற்றது. அந்த வீட்டிலேதான் 1832இல் வள்ளல் இராமலிங்க அடிகள் தமது 9 ஆவது அகவையில் 'உலகெலாம்' என்றெடுத்துப் பேசியதாக வரலாற்றில் காணப்பெறுகின்றது. இராமலிங்க அடிகள் உயிர் இரக்கக் கொள்கைகளைப் பரப்பும் பொருட்டே மறைமலையடிகளார் 'சமரச சன்மார்க்க சங்கம்' என்ற அறநிறுவனத்தைத் தொடங்கி நடத்தி வந்தனர். 1916இல் தனித் தமிழ் இயக்கத்தில் ஈடுபட்டு அடிகளார் 'சுவாமி வேதாசலம்' என்னுந் தமது பெயரை 'மறைமலையடிகள்' என்றும், தாம் நடாத்திய 'ஞானசாகரம்' என்னும் இதழின் பெயரை 'அறிவுக் கடல்' என்றும், தாம் தொடங்கிய 'சமரச சன்மார்க்க சங்கம் என்னும் பெயரைப் 'பொதுநிலைக் கழகம்' என்றும் மாற்றி அமைத்தனர்.

30—4—57 இல் செயற்குழுவினரின் சார்பாக முன்னைய தீர்ப்பு ஒப்புக்கொள்ளப் பெற்றதும் 5—5—57இல் பல்லாவரத்தில் மாளிகையிலிருந்த பேழைகளையும் புத்தகங்களையும் 105 இலிங்கிச்செட்டித் தெரு இல்லத்துக்கு எடுத்து வந்தேன். ஓரிரு பகுதிகளில் குடியிருந்தவர்களைக் காலி பண்ணும்படி சொல்லி, நூல்நிலையத்துக் கேற்பச் சில சீர்திருத்தங்களை யெல்லாம் செய்தபின், 24—8—58இல் ஆளுநர் தலைமையில் கல்வி நிதியமைச்சர் மாண்புமிகு எம். பக்தவத்சலம் அவர்கள் நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார்கள். முழு விவரம் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு கூகூ பரல் க இல் காண்க.

திரு. வே. திருநாவுக்கரசுக்கு எனது வேண்டுதலின்படியே அடிகளார் ஒரு பங்கு கொடுப்பதற்கு இசைந்தனர் என்பதை

முன்னமே கூறியுள்ளேன். அங்ஙனமிருக்கவும் 11-8-53இல் தூத்துக்குடியில் சைவசித்தாந்த சபையினர் சித்தாந்தப் பேராசிரியர் ந. சிவகுருநாத பிள்ளை அவர்களது 81ஆவது பிறந்த நாள் விழாவைத் திருஞானசம்பந்தர் மடத்திலே கொண்டாடினர். யான் அதற்குப் போயிருந்தேன். எனது பேச்சிலே அடிகளாரது விருப்ப ஆவணம் பற்றிய குறிப்புக்களை உள்ளபடி எடுத்து விளக்கினேன். அக் கூட்டத்திலிருந்த திரு. வே. திருநாவுக்கரசு 'பொய், பொய், பொய்' என மூன்று முறை உரத்த குரலில் கூவினர். அஃதொன்றே போதும் அவரது மனப்பான்மை அறிவதற்கு.

அடிகளாரோடு பல ஊர்கட்குச் சென்று பெரும் புலவர்களோடு பழகியவரும், சில ஆண்டுகள் உடன் வாழ்ந்தவரும், வித்துவான் பட்டம் பெற்றவருமான திரு. வே. திருநாவுக்கரசு நன்கொடை திரட்டியும் கடன்பெற்றும் மறைமலையடிகள் வரலாற்று நூலை விரிவாக எழுதத் திட்டமிட்டு 328 பக்கங்கள்வரை தூத்துக்குடி இராமன் அச்சகத்தில் அச்சிட்டனர். மேலும் அச்சிட வேண்டிய 508 பக்கங்களையும் அச்சிட முடியாமல் என்னிடம் வந்து அவற்றை அச்சிட்டு நூலுருவாக்கித் தருமாறும் விற்பனை உரிமையினைக் கழகத்துக்கே கொடுப்பதாகவும் இறைஞ்சி வேண்டினர். அடிகளாரது மாண்பிலே ஈடுபட்ட யான் எங்ஙனம் மறுப்பேன்? எனவே அதனை ஏற்றுக் கழகத்தில் தொகுத்து வைத்திருந்த படங்களை யெல்லாம் அச்சிட்டுச் சேர்த்தும், உயர்ந்த கட்டடஞ் செய்தும், அழகிய மேலுறை அச்சிட்டும், கண்கவர் வனப்பினதாய் நூலை உருவாக்கிக் கொடுத்தேன். அதனை ஆசிரியரே தமது முகவுரையில் பாராட்டியுள்ளனர். அவர் தூத்துக்குடியில் அச்சிட்ட பகுதியிலுள்ள பிழைகளின் திருத்தம் மட்டும் இறுதிப் பக்கத்தில் சேர்த்திருக்கின்றனர். கழகத்தில் ஒப்படைத்தபின் பிழையில்லாமல் அச்சிடும் பொறுப்பினை நான் ஏற்றுக்கொண்டேன்.

அடிகளார் நாட்குறிப்புக்கள் எல்லாம் திருநாவுக்கரசனார் இடமே இருக்கின்றன என்பது வரலாற்று நூலால் அறியலானேன். கழகத்தில் பதிப்புத்துறையில் பணிபுரிந்து கொண்டிருந்த திரு. மு. சதாசிவம் எம். ஏ. அவர்களிடம் 6 ஆண்டு நாட்குறிப்புக்கள் இருப்பதறிந்தேன். அவரைக் கண்டித்து அவரிடமிருந்த நாட்குறிப்புக்களைப் பெற்றுக்கொண்டேன். எஞ்சிய 35 நாட்குறிப்புக்கள் திரு. வே. மாணிக்கவாசகரிடம் இருந்தன அவற்றை வாங்கிக் கொடுத்தால் மட்டுமே வரலாற்று நூலை முடித்துக் கொடுப்பேன் என்றதும் அவை என்பால் சேர்க்கப் பெற்றன. நாட்குறிப்புக்கள் யாவும்

கோடிட்ட ஏடுக (Ruled note books) ளில் படி செய்து வைத்திருக்கின்றேன். 1946 முதல் 1950இல் சில திங்கள் வரை ஒரே ஏட்டில் எழுதிய நாட் குறிப்பு மட்டும் உயர் நீதிமன்றத்திலிருக்கிறது. அதனைப் பெறுதற்கு முயல்கின்றேன்.

விருப்ப ஆவணம் ஒப்புக்கொள்ளப் பெற்றதும் செயற்குழு உறுப்பினர்களில் என்னைத் தவிர எஞ்சிய அறுவரும் ஒன்று கூடிப் பேசித் திரு. ஆடலரசைச் செயலராக அமர்த்தினர். கழகம் அடிகளார் நூல்களை அச்சிடுவதற்குச் சில பொருந்தாத திட்டங்களைக் குறிப்பிட்டு அவற்றை ஒப்புக்கொண்டால் மட்டுமே அச்சிடுவதற்கு உரிமை தரப்படும் என்றனர். அதற்கு யான் இசையவில்லை. புத்தக விற்பனையிலிருந்து வருந் தொகையினை யானே ஆவணத்திற் கண்டபடி அடிகளார் குடும்பத்தினர்க்கு வழங்கிவிட்டு, எஞ்சிய தொகையினையும் கணக்கையும் செயலருக்கு அனுப்பி வைத்தேன். இனிச் செயலர் தான் அடிகளார் குடும்பத்துக்குக் கொடுத்தல் வேண்டும். எனவே, கழகம் செயலருக்கே விற்பனைத் தொகையும், கணக்கும் அனுப்புதல் வேண்டும் என்று தீர்மானித்தனர். அடுத்த முறை அனுப்ப வேண்டிய தொகையினைக் கணக்குடன் செயலருக்கு அனுப்பி வைத்தேன். அவர் கழகத்திற்கு ஒப்புவித்து அச்சிட வேண்டிய நூல்களில் இரண்டைக் குழுவின் சார்பில் தாமே வெளியிட்டதோடு, வேண்டாத செலவுகளையெல்லாம் செய்துவிட்டுக் குடும்பத்தினர்க்கு மிகச் சிறிய தொகையினைக் கொடுத்தனர்.

எனவே, குடும்பத்தினர் O. P. No 90 of 1961 எண்ணுள்ள வழக்கை உயர்நீதி மன்றத்தில் பதிவு செய்தனர். 10 - 11—1961இல் வழக்கு மாண்புமிகு நடுவர் வெங்கடாத்திரி அவர்கள் முன் வரவே அவர் செயற் குழுவினரை நீக்கிவிட்டு அரசு பொறுப்பாட்சியாளர் (Official Trustee) அவர்களை வரவழைத்து அடிகளார் சொத்துக்களின் பொறுப்பை எடுத்துக் கொள்ளும்படி தீர்ப்பளித்தனர்.

பல்லாவரம் மாளிகையினை விற்பதற்கு மெயில், இந்து இதழ்களில் பொறுப்பாட்சியாளர் (O.T.) விளம்பரப்படுத்தினர். யான் அப்போது தமிழகவரசில் கல்வி நிதியமைச்சராக விருந்த மாண்புமிகு, சி. சுப்பிரமணியம் அவர்களிடம் ஒப்புயர்வில்லாத தனிப் பேரறிஞர் மறைத்திரு மறைமலையடிகளார் வாழ்ந்த இல்லம் எவரிடமோ போக இடங் கொடுத்தலாகாது. அதனை அரசே வாங்கிக் கலைமன்றமாக்கி அதன்கண் அடிகளார் நூல்கள், கையெழுத்துப்படிகள், நாட் குறிப்புக்கள், இசைத் தட்டுக்கள், அவர்கள் வழிபாடு செய்த அம்மை அம்பலவாணர்

நால்வர் திருவுருவங்களெல்லாவற்றையும் அங்கே இருந்தபடியே அமைத்தல் வேண்டும். அங்ஙனம் அடிகளார் இல்லத்தைக் கலைமன்றமாக அமைப்பின் தமிழகவரசுக்கே பெரும் புகழ் ஏற்படும் என்றேன். அம்மாளிகைக்கு அரசுப் பொறித்துறை யிலுள்ள மேற்பார்வையாளரைக் கொண்டு ரூ. 40,000 விலை மதிப்பிட்டு, மத்திய அரசுக்கு விண்ணப்பம் எழுதி மாண புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் பரிந்துரையுடன் அனுப்பி வைக்கப் பட்டது. 40 நாட்களில் ரூ. 25,000 நடுவணரசினர் அனுப்பி வைத்தனர். தமிழக அரசு ரூ. 10,000 அளித்தது. எஞ்சிய ரூ. 5,000 சேர்த்துப் பொறுப்பாட்சியாளரிடம் ஒப்புவிக்கப்பட்டது. அவர் அத்தொகையினைப் பெற்றுக் கழகத்தின் அறநிலையமாகிய சைவசித்தாந்த சங்கத்துக்கு 30-5-62இல் பதிவு செய்து உரிமை யாக்கினர். கலைமன்றத்துக் கேற்பச் சில சீர்திருத்தங்களையெல் லாம் செய்ததோடு தோட்டத்தையும் வளப்படுத்தியபின் 12-7-1962இல் மதுரை ஆதீனம் அவர்கள் தலைமையில் கல்வி நிதியமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் கலைமன்றத் தைத் திறந்து வைத்தார்கள். அதன் முழுவிபரம் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 36 பரல் 12இல் காண்க.

நடுவணரசு அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் முன்னின்று கழகம் அறப்பணிக்கு ஒதுக்கிவருந் தொகைக்கு வரி விலக்கு அளிக்கச் செய்ததும், கலைமன்றம் அமைப் பதற்குப் பொருளுதவி அளிக்கச் செய்ததும் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுதற்குரியன.

விருப்ப ஆவணத்தை யொட்டி நடைபெற்ற சில நிகழ்ச்சி களை இங்கே கூறுவது முதன்மையாகும்.

அடிகளார் பிரிவு நிகழ்ந்த அடுத்த ஆண்டு மே முதல் நாள் யாழ்ப்பாணத்திலே நான்காவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அதற்கு என்னைக் கட்டாயம் வருமாறும், அடுத்த ஆண்டு திருநெல்வேலியில் ஐந்தாவது மாநாடு நடை பெற ஏற்பாடு செய்யப்படும் என்று மாநாட்டிலே அறிவிக்கு மாறும் தமிழக அரசு அமைச்சர் மாண்புமிகு தி. சு. அவிநாசி லிங்கஞ் செட்டியார் விரும்பிச் சொன்னர். அதன்பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு 1951 ஏப்ரல் இறுதியிற் சென்றேன். அங்கே போய்ச் சேர்ந்த மறுநாளே பெரியம்மை (வைசூரி) கண்டது. தொற்றுநோய் மருத்துவமனையிற் சேர்க்கப்பெற்று 40 நாட்கள் தங்கிப் பின் திருச்சிவழி நெல்லைக்குத் திரும்பி னேன். அக் கடுமையான நோயினின்றும் என்னை இறைவன் காப்பாற்ருவிடில் மறைமலையடிகள் நூல் நிலையமோ, மறைமலை யடிகள் கலைமன்றமோ ஏற்பட்டிருக்குமா என்பதை இதனைப் படிப்பவர்களின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

விருப்ப ஆவணம் ஒப்புக்கொள்ளப் பெறும்வரை பொன்னம்மாள் குடும்பம், கண்ணம்மாள் குடும்பம் இரண்டிற்கும் தனித்தனியே திங்கடோறும் ரூ. 35/- விழுக்காடு கடனாக என் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்து வந்தேன். அவ்வகையில் ஒவ்வொரு குடும்பமும் ரூ. 2500/- பெற்றனர். ஆவணம் ஒப்புக்கொள்ளப் பெறாவிடில் யான் அத்தொகை முழுவதையும் இழக்க நேரிட்டிருக்கும். ஆனால் ஆவணம் ஒப்புக்கொள்ளப் பெற்றதால் பணம் முழுமையும் வட்டியுடன் வரவு வந்துவிட்டது.

கழக வழிச் செலவு செய்து வழக்கு நடத்தக் கழகச் செயற்குழுவினரில் ஓரிருவர் விரும்பாவிடினும் இது கழகத்தின் கடமை என எடுத்துரைத்ததன்பின் ஒரு மனதாக ஒப்புதல் அளித்தனர். அதற்குச் செலவிட்ட தொகையும் வரவு வந்துவிட்டது.

21—7—1959 இல் பண்டிதர் ஆனந்தர் வீட்டிலே நடைபெற்ற செயற்கூட்டத்தில் என் தமையனார் மூத்த மகளைக் கட்டியவரும், கழக மேலாளராக விருந்தவருமாகிய திரு. க. சொக்கலிங்கம் எனக்கெதிரே கால்மேல் கால் போட்டு உட்கார்ந்துகொண்டு, வாயில் சிகரெட்டை வைத்துப் புகையினை விட்டு, அவர் தம் சிறுமையில் பெருமை கொண்டனர். பின்னர் நடைபெற்ற செயற்கூட்டங்கட்கு யான் போக விரும்பவில்லை.

பல்லாவரம் வீட்டிலே காவலுக்கு வைக்கப் பெற்ற செயராமன் தன் மனைவியுடன் பின்பக்கமுள்ள அறையில் குடியிருந்தான். அவ்விருவரும் வெளியே சென்றிருந்தபோது திரு. ஆடலரசு தம் நண்பர் சிலருடன் பூட்டை உடைத்து அவர்கள் வைத்திருந்த பொருள்களை எடுத்து வெளியே போட்டு விட்டு வேறு பூட்டுப்போட்டார். செயராமன் மனைவி தனலட்சுமி குற்றவழக்குப் போடவே, ஆடலரசு உட்பட நண்பர் மூவர்க்கும் ரூபா 10 விழுக்காடு சைதை குற்றவழக்கு மன்ற நடுவர் தண்டம் விதித்தனர்.

அடிகளார் விரும்பிய வண்ணம் நூல்நிலையமும் கலைமன்றமும் சீரும் சிறப்பும் பெற்று நடைபெறுகின்றன. சுற்றுலாத் துறையினர் கவின் மிக்க காட்சிக் கூடங்களில் ஒன்றாகக் கலைமன்றத்தையும் சேர்த்து அமைத்துள்ளனர்.

இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுதற்கு எத்துணை முயற்சியும் அலைச்சலும் இருந்திருக்க வேண்டுமென்பது காய்தல் உவத்தலின்றிக் கருதுவார்க்குப் புலனாகும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். குறள்-கசுசு

—வ. சுப்பையா.

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

(புல்⁴—விரும்பற் கருத்து வேர்ச்சொல்.)

பொருந்தற் கருத்தினின்று மனம் பொருந்துதலாகிய விரும்பற் கருத்துத் தோன்றும்.

புல்லுதல் = நட்புச் செய்தல்.

புல்—புல்கு. புல்குதல் = நண்பராய் மருவுதல்.

புல்—புர்—புரி. புரிதல் = விரும்புதல்.

''புகுமுகம் புரிதல்'' (தொல். மெய்ப்பாட். 13.)

புரித்தல் (பி. வி.) = விரும்பச் செய்தல்.

''புரித்த தெங்கிள நீரும்'' (சீவக. 2402).

புரி—வ. ப்ரீ—ப்ரிய, ப்ரீதி, ப்ரேம (முதலியன).

புரி—பரி. பரிதல் = 1. பற்றுவைத்தல். ''பண்டம் பகர்வான் பரியான்'' (பு. வெ. 12, ஒழிபு. 2). 2. சார்பாகப் பேசுதல். அவனுக்காகப் பரிய வேண்டாம். (உ. வ.) 3. காதல் கொள்ளுதல். ''பாண பரிந்துரைக்க வேண்டுமோ'' (ஐந். ஐம். 23). 4. இரங்குதல். 'பாழாய்ப் பரிய விளிவது கொல்'' (பு. வெ. 3 : 8). 5. வருந்துதல். ''பழவினைப் பயனீ பரியல்'' (மணி. 12 : 50). 6. வருந்திக் காத்தல். ''பரியினு மாகாவாம் பாலல்ல'' (குறள். 376). 7. அஞ்சுதல். ''வடுப்பரியு நாணுடையான்'' (குறள் 502).

பரி = 1. அன்பு. (W). 2. வருத்தம். (சூடா). புல்—புள்—(புளு)—புகு—புகல், புகலுதல் = 1. விரும்புதல். ''செருப்புகன் றெடுத்த'' (திருமுரு. 67). 2. மகிழ்தல். ''முகம்புகல் முறைமையின்'' (தொல். கற். 11).

புகல் = 1. விருப்பம். ''வானுறை புகறந்து'' (பரிபா. 19 : 1). 2. கொண்டாடுகை. ''புகலகல் நின்மார்பின்'' (கலித். 79).

புகல்—புகல்வு = விருப்பம். ''முனைபுகல் புகல்வின் மாருமைந்தரொடு'' (பதிற்றுப் 84 : 17).

புள்—பிள்—பிண்—பிணி—பிடி = பெண்யானை.

''பிடியென் பெண் பெயர் யானை மேற்றே'' (தொல். மரை 52). பிணி = பற்று. ''பொருட்பிணிச் சென்று'' (அகம். 27)

பிடித்தல்=1. பற்றுதல். 2. விரும்புதல். பிண்—பிணா= 1. பெண். 2. பெண்டு. ''பெண்ணும் பிணவும் மக்கட்குரிய'' (தொல். மர. 62).

பிணா—பிணவு=பன்றி, புல்வாய், நாய், கரடி என்பவற்றின் பெண்.

''பன்றி புல்வாய் நாயென மூன்றும் ஒன்றிய என்ப பிணவின் பெயர்க்கொடை'' (தொல். மர. 59).

''எண்குதன் பிணவோ டிருந்தது போல'' (மணி. 16:68). பிணவு—பிணவல்=மேற்குறித்த மூன்றன் பெண்.

''பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.'' (தொல். மர. 60).

பிணா—பிண—பிணை=1. விருப்பம். ''பிணையும் பேணும் பெட்பின் பொருள'' (தொல். உரி. 40). 2. விலங்கின் பெண். (பிங்).

''புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடின் பிணை யெனப் படுமே.'' (தொல். மர. 58).

பெண்மான். ''பிணையேர் மடநோக்கும்'' (குறள். 1089) பிள்—பெள். பெள்+தல்=பெட்டல்.

பெட்டல்=1. விரும்புதல். ''பிரித்தலும் பெட்டலும்'' (தொல். கற் 6). 2. செய்ய விரும்புதல். ''பெட்டவை செய்யார்'' (இனி. நாற். 23). 3. காதலித்தல். ''பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை'' (குறள். 141).

பெட்பு=1. விருப்பம். ''குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்'' (தொல். களு. 11). ''பெட்புறும்.......தீப நிகர்த்த வால்'' (கம்பரா. மூலபல. 135). 2. பேணுகை. ''பெட்பின் றீதல் யாம்வேண் டலமே'' (புறம். 205)., ''பெட்ட வாயில் பெற் றிரவுவலி யுறுப்பினும்'' (தொல். களு. 11). 3. அன்பு. (சூடா). 4. பாதுகாப்பு.

பெட்டார்=1. நண்பர். (சூடா). 2. விரும்பியவர். ''பேணாது பெட்டார்'' (குறள். 1178).

பெள்—பெட்டை=1. பெண். 2. சில விலங்கு புட்களின் பெண்பால்.

''ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய''
(தொல். மர. 58).

"புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப" (தொல். மர. 54).

ம., தெ. பெட்ட.

பெட்டையன் = 1. ஆண்மையற்றவன். 2. பேடி. பெட்டைச்சி என்பது இரட்டைப் பெண்பாலான உலக வழக்கு. பெட்டை மருட்டு = பெண்டிரை அல்லது பேதையரை அச்சுறுத்தி ஏமாற்றுகை.

பெட்டைச் சிறுக்கி என்னும் வயவுச்சொல் இழிவழக்கு. சிறுமியரைப் பெட்டைப் பசன்கள் என்பது கொச்சை வழக்கு. (வ. ஆ). பையன் — பயன் — பசன்.

பெட்டை—பெடை = பறவைகளின் பெண்பால். "பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்" (தொல். மர. 55).

"செந்தலை யன்றில் இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு" (குறுந். 160).

ம. பெட, க. ஹெட்டே. பெடை — பேடை = பெண்பறவை.

"மாத ரிருங்குயின் மணிநிறப் பேடை" (பெருங். 1:33:29).

ம. பேட, க. ஹேட்டே.

பேடை — பேடு = 1. பெண்பால். "பேடலியாணர் போலும்" (தேவா. 249 : 1). 2. பெண் பறவை. "பேடுஞ் சேவலும்" (மலைபடு. 141, உரை). 3. சில விலங்குகளின் பெண். "தெய்வமாக வைத்த எருமையாகிய பேட்டின் கொம்போடே" (கலித். 114, உரை). 4. பேடனுக்கும் பேடிக்கும் பொதுப்பெயர். 5. பேடி. 6. கூத்துப் பதினொன்றனுள் ஒன்றான பேடிக் கூத்து. அது,

"சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை யேந்திள வனமுலை
யகன்ற வல்குலந் நுண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து."

ஆடுவது, (மணி. 3 : 116—122). "பேடிக் கோலத்துப் பேடு காண் குநரும்" (மணி. 3 : 125). 7. நடுவிரல். "சுட்டும் பேடும்" (சிலப். 3 : 18, உரை). 8. உள்ளீடில்லாக் காய். இந்தத் தேங்காய் பேடு. (உ. வ).

பேடு—பேடன்=ஆண்டன்மை கொண்ட பெண்.

பேடன்—பேடி=1. பெண்டன்மை கொண்ட ஆண். "பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்" (தொல். கிளவி. 4). "பெண்ணவா யாணிழந்த பேடி" (நாலடி. 251). 2. புணர்ச்சியாற்றலின்மை. 3. நடுவிரல். "சுட்டுப் பேடி" (சிலப். 3 : 18, உரை மேற்கோள்), 4. அச்சம்.

ம., தெ., க. பேடி, து. பேடி (b).

பேடித்தல்=அஞ்சுதல்.

இச் சொல்லைப் பீஷ் என்னும் வடசொற்றிரிபாகக் காட்டி யுள்ளது. சென்னைப் ப. க. க. த. அகரமுதலி. அவ் வட சொல்லே பே (பேம்) என்னும் தென்சொற்றிரிபாகும்.

ஆய்த வெழுத்தைப் பேடி யெழுத்தென்று உவின்சிலோ அகரமுதலி குறித்திருப்பது பொருந்தாது. அதை அலியெழுத் தென்பதே பொருத்தமாம். உயிரும் மெய்யுமல்லாத ஆய்தம், ஆணும் பெண்ணுமல்லாத அலிபோன்றிருத்தலின், அலி யெழுத் தென்னப்பட்டது. பேடிக்கு ஆண் தோற்றமும் பெண்டன்மையு முண்டு.

"எண்ணுங் குறிலா ணியைந்த நெடிலெல்லாம்
பெண்ணொற் றொற்றுய்தம் பேடாகும்"

என்று வெண்பாப் பாட்டியல் நூற்பாவோதினும் (முதன்மொழி. 6), "ஒற்றெழுத்தும் ஆய்தவெழுத்தும் அலியெழுத்தாம்" என்றே அதன் உரை கூறுதல் காண்க. பேடு என்பது பேட னுக்கும் பேடிக்கும் பொதுப்பெயர். ஒரு பாலுந் தழுவாததே அலியாம்.

பெள்—பெட்டு. பெட்டுதல்=விரும்புதல்,

"ஒன்றியான் பெட்டா வளவை" (புறம். 399).

"ஒன்றியான் பெட்டா வளவையின்" (பொருந. 73).

பெட்டா வளவை=விரும்பிக் கேட்பதற்கு முன்னே.

பெள்—பெண்=1. இருதிணைப் பெண்பால். 2. உயர் திணைப் பெண்பால். "பெண்ணும் பிணவும் மக்கட் குரிய" (தொல். மர. 92). "பெண்ணே பெருமை யுடைத்து" (குறள். 907). 3. சிறுமி. 4. மகள் "இந்திரன் பெண்ணை" (கந்தபு. திருப்ப. 35). 5. மணமகள். "பெண்கோ ளொழுக்

கம் கண்கொள நோக்கி'' (அகம். 112). 6. மனைவி. ''பெண் ணீற் றுற்றென'' (புறம். 82). 7. பெண்டன்மை.

ம. பெண், க. பெண், ஹெண்ணு.

பெண்ணடி = பெண் பிறங்கடை (வாரிசு). ''ஒரு பெண் ணடிதன் காணிக்குத் தேடக் கருத்தாகி'' (விறலிவிடு. 152).

பெண்ணலி = பெண்டன்மை மிக்க அலி. (தொல். மர 106, உரை).

பெண்ணன் = ஆண்மையற்றவன்.

பெண்ணாண் = கணவன் மனைவியர் (தம்பதிகள்) (நாமதீப 176)

பெண்ணாறு = கிழக்கு நோக்கி யோடி வங்கக் கடலிற் கலக்கும் ஆறு. ''ஆணாறு பெண்ணாறு ஒன்றின்றிக்கே'' (ஈடு, 4 : 4 : ப்ர).

பெண்ணெழுத்து = நெட்டுயிரெழுத்து. (வெண்பாப். முதன்மொ. 6).

பெண்ணையன் = 1. பெண்டன்மையுள்ளவன். 2. மனைவிக் கடங்கியவன்.

பெண்ணைவாயன் = பெண்டிரைப்போற் பேசுவோன்.

பெண்பிள்ளை = 1. பெண்குழந்தை. 2. பெண்டு. ''நாயகப் பெண்பிள்ளாய்'' (திவ். திருப்பா. 7). 3. மனைவி.

பெண்பிள்ளைப்பிள்ளை = பெண் பிள்ளை. (மிகைபடக் கூறும் உலக வழக்கு). ''பொம்பிளைப்பிள்ளை'' என்பது இதன் கொச்சை வடிவு.

பெண்பெண்டாட்டி = பெண்டு. ''ஒரு பெண்பெண்டாட்டி ஆணுடை யுடுத்து'' (ஈடு, 6 : 2 : ப்ர.) இச் சொல், இன்று வடார்க்காட்டு ஆம்பூர் வட்டத்தில், பொம்மநாட்டி என்னும் கொச்சை வடிவில் வழங்குகின்றது.

பெண்மகள் = 1. பெண்டு. (W.). 2. சிறுமி. ''பேதைப் பருவத்துப் பெண்மகளை'' (தொல். சொல். 164, சேனா.).

பெண்மகன் = சிறுமி. ''பெண்மை யடுத்த மகனென் கிளவியும்'' (தொல். பெயரியல், 10). இதற்கு, ''புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை, மாரோக் கத்தார் இக் காலத்தும் பெண்மகனென்று வழங்குப'' என்பது சேனாவரையர் உரை.

பெண்மகன் என்னும் மாரேக்கத்தார் வழக்கு, பெட்டைப் பசன் என்னும் ஆம்பூர் வட்டத்தார் வழக்குப் போன்றது.

மாரேக்கம் (மாரேகம்) கொற்கை சூழ்ந்த நாடு. பெண் வாயன் = பெண்டிர்போற் சளசளவென்று பேசுபவன்.

பெண்பாலரையும் மனைவியையும் பெண்சாதி என்பது இருபிறப்பி (hybrid) என்னும் இழிவழக்கு. இதில், நிலைச்சொல் தமிழ்; வருஞ்சொல் வடமொழி.

பெண்சாதி = 1. பெண்பாலார். "உலகத்துப் பெண்சாதி விருப்பமுற்ற மான்பிணைபோலும் நோக்கினையுடைய மகளிர்" (மதுரைக். 555, உரை). 2. மனைவி. "உன்தன் வீட்டுப் பெண்சாதிக்காக" (இராமநா. அயோத். 8).

தேவமொழியெனத் தவருகவும் பேதைத்தனமாகவும் நம்பப்படும் வடசொல், பெண்சாதி என்னும் வழக்கில் இழிவடைந்திருப்பது வியப்பிற்கிடமானதே.

பெண்—பெண்டு = 1. பெண்பாலள். "ஒரு பெண்டா விதய முருகினையாயின்" (வெங்கைக்கோ. 47). 2. "வனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே" (ஐங்குறு. 57).

ம. பெண்டி. க. பெண்ட, ஹெண்ட, தெ. பெண்ட்டி.

பெண்டு—பெண்டன் = பேடி. (திவா.).

பெண்டு—பெண்டகன் = பேடி. (பிங்.).

க. ஹெண்ணுக.

பெண்டாளன் = பெண்டை மனைவியாகக் கொண்டவன் அல்லது நுகர்பவன்.

பெண்டாட்டி = 1. பெண். "ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து" (இறை. 1, உரை). 2. மனைவி. "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" (திரிகடு. 96). 3. வேலைக்காரி. (S. I. I. ii 483).

க. ஹெண்டத்தி.

பெள்—பேள்—பேட்பு = விருப்பு.

பேள்—பேண். பேணுதல் = 1. விரும்புதல். "பேணுன் வெருளி" (குறள். 526). 2. போற்றுதல். "தந்தைதாய்ப் பேண்" (ஆத்தி. 20). 3. பாதுகாத்தல். "பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்" (புறம். 9). 4. மதித்தல். "தெய்வம் பேணித் திசைதொழு தனிர் சென்மின்" (பரிபா.

15 : 48). 5. மதிப்புரவாக நடத்துதல். "பிறர்தன்னைப் பேணுங்கா ணனலும்" (திரிகடு. 6). 6. வழிபடுதல். "அமரர்ப் பேணியும்" (பட்டினப். 200). 7. பொருட்படுத்துதல். "துவலைத் தண்டுளி பேணார்" (நெடுநல். 34). 8. பிழை நேராமற் காத்தல். "பாணியுந் தூக்கு நடையும் பெயராமை பேணி" (பு. வெ. 12, ஒழிபு, 19). 9. சுவடித்தல். "பேணி திருத்தா ரணி" (கலித். 104). 10. கருதுதல். (திவா.). 11. குறித்தல். (சூடா.). 12. உட்கொள்ளுதல். "விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி" (சிறுபாண். 244). 13. அறிதல். "பேணு தொருத்தி பேதுற" (பரிபா. 7 : 67). 14. ஒத்தல். "பெருநருப் பேணியவே கூர்நரு வார்ந்தவள் கண்" (பரிபா. 7 : 63). 15. மகிழ்தல். "பிறனுக்கம் பேணு தழுக்கறுப்பான்" (குறள். 163).

பேண் =1. விருப்பம். "பிணையம் பேணும் பெட்பின் பொருள" (தொல். உரி. 40). 2. பேண் மரம். (W.).

பேண்—பேணம்=1. மதிப்பு. 2. பதனம். 3. ஊட்டந் தருகை.

பேண்—பேணரவு=பேணல்.

பேண்—பேணி=ஒருவகைப் பணியாரம்.

பேண்—பேணகம்=ஒருவகைப் பலகாரம்.

வ. பேணிக (phēṇika).

பேணுநர் = பாதுகாப்போர். "பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ" (மணி. 14 : 47).

பேணார்=பகைவர். "பேணா ரகநாட்டு" (பு. வெ. 3 : 4).

ஒ. நோ : பெட்டு=விருப்பம். E. pet.

"pet, n., & v. t. (-tt-). 1. Animal tamed & kept as favourite, or treated with fondness; darling, favourite, (often attrib.); one's ~ *aversion*, what one specially dislikes; ~ - *cock*, small stop-cock for draining, letting out steam, etc; ~ *name*, one expressing fondness or familiarity.

2. v. t. Treat as a ~, fondle; ~ *ting party* (colloq.), social gathering of young people at which hugging, kissing. etc., are indulged in. [16th C. Sc. & north., orig. unkn.]"

—THE CONCISE OXFORD DICTIONARY.

"முளவுமா" முள்ளம்பன்றியா?

(ஓர் ஆய்வு)

[இரா. மதிவாணன், M.A. B.Ed.,

தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி, சேலம்-7.]

சங்க இலக்கியங்களில் பயின்றுவரும் விலங்குகளின் பெயர்களுள் முளவுமா என்பதும் ஒன்று. இது முயலைக் குறிக்கும் சொல். ஆனால் நச்சினார்க்கினியர் முதல் தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சா. வரை வந்த உரையாசிரியர்கள் அனைவரும் இதற்கு முள்ளம்பன்றி என்றே உரை எழுதியுள்ளனர்.

முளவு என்னும் சொல்லை மேலோட்டமாகக் கண்டு முள்ளுடைய விலங்கு என்று பொருள் கொண்டனர் போலும். இது முள்ளுடைய விலங்காயின் இலக்கண நெறிப்படி முள்+மா='முண்மா' என்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழிலக்கியங்களில் 'முளவுமா', 'முளவுமான்' 'முளமா' என்று குறிப்பிடப்படுகிறதே தவிர 'முண்மா' என்று யாண்டும் எடுத்தாளப்படவில்லை. மாறாக, புறநானூறு 325 ஆம் பாடலில் 'முளவுமா' என்பதற்கு 'முழவுமா' என்று பாடபேதம் இருப்பதாக உரையாசிரியர் எடுத்துக்காட்டி யுள்ளார். முழவுமா என்பதும் பாடமாயின் இவ் விலங்கை முள்ளுடைய பன்றி என்று எவ்வாறு பொருள் கொள்ள முடியும்?

விள, நிலா, நரு என்னும் சொற்கள் விளவு, நிலவு. நறவு என உகர விகுதி பெறுதல்போல 'முள' என்னும் சொல் முளவு என உகர விகுதி பெற்றதாகல் வேண்டும். இக் கூற்றை நிறுவும் வண்ணம் திராவிட மொழிகளில் கன்னடத்தாரும் துளு நாட்டாரும் முயலை இன்றளவும் 'மொள'' என வழங்குகின்றனர் கன்னட மக்கள் முயலை 'மொள்' என வழங்குவதைக் கண்ட பிறகு 'முளவுமா' தமிழிலக்கியங்களில் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டேன்.

குடகு மக்கள் இதனை 'மொண' என்றும், நடுவண் இந்திய திராவிட மொழிகளில் ஒன்றான கொலாமி மொழி பேசும் மக்கள் இதனை 'மிதெ' என்றும் இன்றளவும் வழங்குகின்றனர். 'முள' என்பது முயலின் விரைவைக் குறிக்கும் காரணப் பெயராக இருத்தல் வேண்டும் முள்—முடு—முடுகு. முடுகுதல்=விரைந்து செல்லுதல். முள்—முள--மள. மளமள என்பது ஒரு விரைவுக் குறிப்பு. முள—முளவு.

தமிழிலக்கியங்களில் 'எய்' என்னும் சொல் முள்ளம் பன்றியைக் குறிக்கும். துளு நாட்டார் இதனை 'எய்ப்பஞ்சி' என்றும் தெலுங்கர் 'ஏதுபந்தி' என்றும் வழங்குகின்றனர்.

மலைபடுகடாத்தில் பல்குன்றக் கோட்டத்துள்ள செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னனைப் பாடிய இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் கௌசிகனர், நெடிதுயர்ந்த மலைக் குகையில் வதியும் எய்ப்பன்றி வேட்டையாடவந்த கானவரைத் தாக்கியது என்றும் அதன் கூரிய முட்களால் தாக்குண்டு இறந் தவனைச் சூழ்ந்து கானவர் அழுதனர் என்றும் குறிப்பிடுகிறார்.

"சேயளைப் பள்ளி எஃகுறு முள்ளின்
எய்தெற இழுக்கிய கானவர் அழுகை" (மலைபடு 300-301)

பெருங்குன்றூர் கௌசிகனர் இதே பாடலில் மற்றோர் இடத்தில் முளவுமாவையும் குறிப்பிடுகிறார்.

.........கடமான் கொழுங்குறை
முளவுமா தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவு நாய் முடுக்கிய தடியொடு விரைஇ
....
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்.
(மலைபடு 176)

மான், முளவுமா, உடும்பு ஆகிய மூவகை விலங்குகளின் இறைச்சியாலான உணவு வகைகளும் அனைத்துக் கானவர் குடில் களிலும் விருந்தினர்க்குப் படைக்கப்படும் என்கிறார்.

மானும் உடும்பும் நாள்தோறும் எளிமையாக வேட்டை யாடிப் பெறும் உணவுப் பொருள்களாதல்போல வேட்டையாடு பவரையும் தாக்கிக் கொல்லும் முள்ளம் பன்றி அன்றாட உணவுப் பொருள்களில் ஒன்றாகவும், அனைத்து இல்லங்களிலும் வழங்கப் படும் உணவாகவும் அமைய முடியாது. முளவுமா என்பது முள்ளம் பன்றியாயின் பெருங்குன்றூர் கௌசிகனர் ஓரிடத்தில் 'எய்' என்றும் மற்றோரிடத்தில் 'முளவுமா' என்றும் குறிக்க வேண்டுவது ஏன்? இரண்டு இடங்களிலும் எய் என்றோ அல்லது முளவுமா என்றோ குறித்திருக்கலாம். இரண்டும் வெவ்வேறு விலங்குகளாக இருப்பதால்தான் வேறு பெயரால் குறித்தார். குன்றக் கானவர் விருந்தினர்க்குப் படைத்த மூவகை இறைச்சி உணவில் மானும் உடும்பும் போல முயலும் எளிமையாக வேட்டையாடிக் கிடைக்கும் உணவாகும். எனவே 'முளவுமா' முயலே என்பது போதரும்.

முள்ளம் பன்றியைக் குறிக்கும் 'எய்' என்னும் சொல் எடுத்தாளப்பட்டுள்ள பாடல்களில் அதன் கூரிய முட்களைப் பற்றிய குறிப்பு தவருமல் இடம்பெறுகிறது.

"எஃகுறு முள்ளின் எய்"

என்று மலைபடுகடாத்திலும்,

'ஈந்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை'

என்று பெரும்பாணாற்றுப்படையிலும்,

"எய்ம்முள் ளன்ன பருஉமயி ரெருத்தின்
செய்ம் மேவல் சிறுகட் பன்றி"

என நற்றிணை 98ஆம் செய்யுளிலும் எய்ப்பன்றியின் கூரிய முள் குறிப்பிடப்படுகிறது.

முளவுமா என்னும் சொல்லை எடுத்தாண்டுள்ள அக நானூறு 142, 182 எண்ணிட்ட பாடல்களிலோ அல்லது புற நானூறு 325, 374 எண்ணிட்ட பாடல்களிலோ அல்லது மலைபடு கடாத்திலோ, நற்றிணை 85 ஆம் பாடலிலோ 'முளவுமா' கூரிய முட்களை யுடையது என்று கூறப்படவில்லை என்பது கருதத் தக்கது.

மலைபடு கடாத்தில் 'எய்' நெடிதுயர்ந்த மலைக்குகை யில் வதிந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல் 'முளவுமா' வீட்டின் புறத்தே மக்கள் நீருண்ணும் ஊருணியின் அருகே வேட்டையாடப் பட்டதாகப் புறநானூறு கூறுகிறது.

... ... அகன்றுவா
சிலைப்பால் பட்ட முளவுமான் கொழுங்குறை. (புறம் 374)

வள்ளல் ஆய் அண்டிரனை இப் பாடலில் பாராட்டும் உறை யூர் ஏணிச்சேரி முடமோசியார், நீர்த்துறையில் வேட்டையாடப் பட்ட முளவுமாவின் இறைச்சி, சந்தனக்கட்டை, யானைத் தந்தம் ஆகிய மூன்றையும் வரிப்புலியின் தோலில் இட்டு, மன்ன னுக்குக் கானவர் விருந்திறை நல்குவதாக்க கூறுகிருர்.

குறிஞ்சி பாடுவதில் வல்லவரான கபிலர், அகநானூறு 182ஆம் பாடலில் காட்டுமல்லிகைக் கொடி படர்ந்த சிறு புதரில் இருந்த முளவுமாவைக் குறவன் அம்பெய்து கொன்றதாகவும் அதனுல் காட்டு மல்லிகைக் கொடிகளில் குருதிக்கறை படிந்த தாகவும் கூறுகிருர்.

"ஒட்டியல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர
முளவுமாத் தொலைச்சும் குன்ற நாட" (அகம் 182)

சிறுபுதரில் ஒளிவது முயலின் இயல்பு. மேலும் அடிபட்ட முயல் தாவித்தாவி ஓடுதலால் கொடிகளில் குருதி படிவதும் இயல்பானதே. முள்ளம் பன்றியின் உடம்பில் முட்கள் இருத்தலானும் அது தரையில் ஓடுவதல்லது தாவித்தாவி ஓடாது ஆதலாலும் தரையில் குருதி சொட்டுமே தவிர, புதரில் குருதி படிய வாய்ப்பில்லை.

கபிலர் குறிஞ்சிநில இயல்பை நன்கறிந்தவராதலால் முயல் வேட்டைக்காரர்கள் வேட்டைநாயை ஏவி முயல் பதுங்கியுள்ள புதரை வளைத்துக் கொள்ளச் செய்து, முயலை அம்பெய்து கொல்லும் திறத்தை இப் பாடலில் நன்கு விளக்கியிருக்கிறார். முள்ளம் பன்றியை வேட்டையாடுபவர்கள் வேட்டை நாயை ஏவி அதனை வளைக்க முடியாது. மேலும் முள்ளம்பன்றி எதிர்த்துத் தாக்குமே தவிர ஓடி ஒளியாது.

அகநானூறு 307 ஆம் பாடலில் மதுரை ஈழத்துப் பூதன் தேவனார், தலைமகனைச் செலவழுங்குவிக்கும் தோழியின் கூற்றாகக் கூறுமிடத்து, தலைமகன் செல்லும் மலை முதலாற்றில் வேங்கையைக் கொன்ற யானைகள் மதஞ்செருக்கி வழிப் போக்கரைக் கொல்லுந் தன்மையன என்றும், எய்ப்பன்றிகளும் பெருங்கைக் கரடிகளும் இயங்கும் கொடுநெறி எனவும் கூறுகிறார்.

"வேங்கை
அடுமுரண் தொலைத்த நெடுநல் யானை
மையலங் கடாஅஞ் செருக்கி மதஞ்சிறந்து
இயங்குநர்ச் செகுக்கும் எய்படு நனந்தலைப்
பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்
... ...
பெருங்கல் வைப்பின் மலைமுத லாறே
... ...
வினைநயந்து
நீங்கல் ஒல்லுமோ ஐய" (அகம் 307)

இப் பாடலில் மதயானையைப் போன்றே கொல்லும் தன்மை வாய்ந்ததாக எய்ப்பன்றி கூறப்பட்டிருத்தலைக் காண்க.

முளவுமா அச்சந் தரத்தக்கதாகவோ தாக்கிக் கொல்லக் கூடியதாகவோ தமிழிலக்கியங்களில் எங்கும் கூறப்படவில்லை.

மாருக, உணவுப் பொருளாகப் பயன்படுவது ஒன்றே சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

புலால் உண்டு பழகியவர்கள் உடும்பு, முயல், மான், கோழி ஆகியவற்றின் இறைச்சியைச் சுவைகருதி மிகவும் விரும்பி உண்பர்.

கானவர்களின் உணவில் முயல் சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதைக் கீழ்க்காணும் பாடல்களால் அறியலாம் :

..................................."சாரல்
கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்துகொடு
காந்தளஞ் சிறுகுடி பகுக்கும்" (நற்றிணை 85)

முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் லாடவர்
உடும்பிழு தறுத்த வொடுங்காழ்ப் படலைச்
சீறின் முன்றில் கூறுசெய் திடுமார். (புறம் 325)

முளமா வல்சி எயினர் தங்கை
இளமா எயிற்றிக்கு இன்னிலை அறி. (ஐங்குறுநூறு 364)

எய்ப்பன்றியின் இறைச்சியையும் கானவர் உண்பது உண்டு எனினும் அதனை எல்லோரும் உண்பர் என்ருே எளிதில் வேட்டையாடக் கிடைக்கக் கூடியது என்ருே கொள்ள முடியாது.

புறநானூறு 177 ஆம் பாடலில் மல்லிகிழான் காரி ஆதியைப் பாடிய ஆவூர் மூலங்கிழார் குடநாட்டு எயினர்கள் எய்ப்பன்றியைக் கொன்று, அதனை மலையிலிருந்து ஊர்ப் புறத்தே கொணர்ந்து தானுக வந்து விரும்பிக் கேட்பவர்களுக்குப் பகுத்தளித்ததாகக் கூறுகிருர்.

........................குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய. (புறம். 177)

எய்ப்பன்றியை வேட்டையாடுவது வேங்கையைக் கொல்வது போன்று ஆண்மக்களின் வீரத்துக்கு எடுத்துக் காட்டாகக் கருதப்பட்டதால்தான், எயினர் தம் வீரத்தின் அடையாளமாக அதனைக் கொணர்ந்து ஊர்ப்புறத்தே மன்னனுக்கோ அல்லது ஊர்மக்களுக்கோ காட்டியிருத்தல் வேண்டும்.

ஆந்திர நாட்டிலும்கூடக் காட்டுப் பன்றியை வேட்டையாடுவது வீரத்தின் அடையாளமாகக் கருதப்பட்டதாகத் தெலுங்கு இலக்கியங்கள் கூறுகின்றன. இதனை ''வராக வேட்ட'' என்று தெலுங்கில் குறிப்பிடுவர். காட்டுப் பன்றியைக் கொல்வதே வீரமாயின் எய்ப்பன்றியைக் கொல்வது தறுகண்மை மிக்க பேராண்மையாகக் கொள்ளப்பட்டிருத்தலும் கூடும்.

கொல்லப்பட்ட எய்ப்பன்றியை அறுத்துக் கூறிடுவதும் ஆண்களால்தான் முடியும். எனவே மேலைச் செய்யுளில் எயினரே அதனைக் கூறிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் நற்றிணை 85 ஆம் பாடலில் நல்விளக்கனார் தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி, முளவுமாவின் இறைச்சியைத் தானே அறுத்துக் கூறிட்டதாகக் கூறுகிறார். இதனாலும் முளவுமா முயலாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

முளவு என்னும் சொல் உகர விகுதி பெருதநிலையில் 'முள்', 'முளா' என வழங்கப்பட்டு நாளடைவில் முய, முயல், முயா, முயால் என நாட்டுப்புற மக்களால் ஒலிக்கப்பட்டிருத்தல் கூடும். சென்னைப் பகுதியில் பாமரமக்கள் பழம், பளம், ஒலித்துப் பின்னர் 'பயம்' எனவே தற்போது பேசுவதைக் காணலாம்.

அல்லாக்கால் முயல் என்பது குழிமுயலையும் (வெண்முயல்) முளவு என்பது காட்டு முயலையும் குறிக்கும் சொற்களாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முளவுமா வெண்முயலைக் குறித்ததா, காட்டுமுயலைக் குறித்ததா என்னும் ஆய்வு ஒருபுறம் இருப்பினும் முளவுமா முள்ளம்பன்றியைக் குறிக்காது என்பதும் முயலையே குறிக்கும் என்பதும் நன்கு தெளிவாகிறது.

———

குறிப்பு: *முளவுமா—என்பது முள்ளம்பன்றியை உணர்த்தும் என்று ''சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்'' என்னும் நூலில் பி. எல். சாமி அவர்கள் எழுதியுள்ளார். இக் கட்டுரை ஆசிரியர் முளவுமா என்பது முயலைக் குறிக்கும் என எழுதியுள்ளதைப் பாவாணர் அவர்கள் ஆதரிக்கிறார்.*

புலிகளை வென்ற காட்டுப் பன்றி

[புலவர். பே. முனியப்பன்]

1. மெய்விதிர்க்கும் நிகழ்ச்சியொன்று மேனுளில்
நடந்ததனை; மேலாந் தந்தை
பொய்யின்றிச் சொல்லியதைப் புவிவாழ்வோர்
நன்ருகப் புரிந்து கொள்ள,
மெய்ம்மையொன்றே எவ்விடத்தும் மிளிருகின்ற
கழகநூல் மேன்மை கொண்டே,
உய்விடமாம் தன்'முண்டந் துறை' தன்னில்
உளுற்றியதை உரைத்தே னிங்கே.

2. முன்வந்த பன்றிதனை முனைந்தடித்த
போதிலது முயற்சி கொண்ட
தன்திறத்தால் கொடும்புலியின் தாக்குதலை
வீழ்த்திவிட்டுத் தப்பிச் செல்ல;
பின்வந்த குட்டியெல்லாம் பெரும்புலியின்
குரல்கேட்டே பேதுற் ருேட;
வன்திறத்தால் நின்றிழிந்த [1]வயப்புலியும்
ஊக்கமின்றி வருந்தி நிற்க;

3. [2]குருளைகளின் பின்வந்த கொழுந்திறல்ஆண்
பன்றிமிக்க கோபத் தோடே
தறுகண்மை காட்டித்தன் தனியாண்மை
நிலைநாட்டத் தானே யங்கு
பெருஞ்சினத்த கொடும்புலியின் பேராற்றல்
எதிர்நோக்க, பின்வாங் காத
அருந்திறத்தால் பீடமைய அடியெடுத்து
வைதியங்கும் அந்த வேளை;

4. வீழ்ந்தெழுந்த வரிப்புலியும் விரைந்துசென்று
புதர்புகுந்து வெறித்து நோக்கத்
தாழ்வின்றி அங்குவந்த தறுகண்மைப்
பன்றிதன்னின் தன்மை கண்டே

---

1. வலிமைமிக்க புலி 2. பன்றிக் குட்டிகள்

மூழ்கியதன் உணர்வையெல்லாம் முனைப்புவல்ல
[1]ஏனத்தின் முகத்தில் வைத்துப்
[2]பேழ்வாயைப் புதுக்கிமிக்க பேராற்றல்
காட்டுதற்காய்ப் பின்னே செல்ல;

5. பயந்தொடுங்கிப் போனதெனப் [3]பருஉமயிர்ப்
பிடரிகொண்ட பன்றி தானும்
அயர்ந்தடுத்த பக்கத்தே அடியெடுத்து
வைப்பதற்குள் ஆர்த்தே பாய்ந்த
வயப்புலியின் கொடுங்கடியும் வறிதாக
உருண்டதுவே வாய்ப்பி ழந்து,
இயங்குவது போல்காட்டி எதிரிதனை
வீழ்த்திவிட்ட ஏனம் அங்கே

6. தனித்திறமை காட்டித்தன் தாக்குதலைத்
தொடங்கிடுமுன் தாவிப் பாய்ந்தே
குனிந்தெழுந்த வரிப்புலியின் குரல்வளையைக்
கடுவிரைவில் குத்தித் தள்ள
இனிப்பிழைப்ப தரிதென்னும் ஏங்கலுடன்
சென்றங்கே இழிந்த போது
கனிச்சுளைகொள் பலாமரத்தின் கருந்தூரில்
அடிபட்டுக் கலங்கிற் றம்மா.

7. தாக்குண்டு கீழ்வீழ்ந்த தன்துணையின்
துன்பமிகு தவிப்பைக் கண்டு
மாக்குரலால் அக்காடே மலைப்படைய
ஒலியெழுப்பி, மலைவாழ் வாழை
ஆக்கமின்றிக் கிழிந்தொதுங்க அதன்ஊடே
நாண்தொடுத்த அம்பாய்ப் பாய்ந்தே
தேக்கமில்லாத் துடிப்பமைந்த திறக்[4]கேழல்
தனையடிக்க; தீபோல் வண்ண

---

1. காட்டுப் பன்றி 2. பிளந்த வாய்

3. நாட்டுப் பன்றிக்கும் காட்டுப் பன்றிக்கும் உள்ள முக்கிய வேறுபாடு, காட்டுப் பன்றியின் பிடரியிலுள்ள வன்மையான மயிர்க் கற்றையே. அதுவே பருஉமயிர் எனப்படுகிறது.

4. காட்டுப் பன்றி

8. குருதியதன் ஒருமுதுகில் கொப்பளித்துப்
பாய்ந்துவர, கொடுங்கண் வேங்கை
மறுநொடியே தாக்குண்டு மல்லாந்து
வீழ்ந்துவிட, மாறி மாறி
[1] இரும்பனையின் செறும்பன்ன எழிலமைந்த
[2] பிணர்ச்சுவல்கொள் ஏனந் தானும்
குறுகிவிரி[3] உரற்றலையால் குத்தியும்பின்
கடித்தும்வன் கொடுமை செய்தே

9. அடர்ந்துயர்ந்த புதர்மூங்கில் அடியொதுக்கி
உடல்சிலிர்த்தே அகன்று போக,
'இடம்வீழ்ந்த துண்ணுமல் இறக்கு'மென்ற
உயர்ச்சியுரை இல்லா தாக,
திடங்கொண்ட [4]வல்லியமாய்த் திகழ்ந்தாலும்
பெருங்கேழற் றிண்மை இல்லா
படங்கொண்ட தன்மையினல் மறித்தெதிர்க்கா
தடங்கியது மாண்பி ழந்து.

10. அன்றுசென்ற பெருந்திறமை அருங்கேழல்
சிறிதுதள்ளி, அச்ச மின்றி,
தகவுடைய புலியெழுந்து தனையெதிர்க்கு
மாவென்னுந் தன்மை நோக்க;
இகழ்ச்சியுற வீழ்ந்துவிட்ட இரும்புலிதான்
துணைநாடி எழுந்து செல்ல,
புகழ்ச்சியுற வெற்றிபெற்ற புலிக்கேழல்
நடந்ததுவே பொலிவைத் தாங்கி.

---

1. பனைமரத்தின் சும்பிபோல் உள்ள செறும்பு போன்ற காட்டுப் பன்றியின் பிடரிமயிர் ஒழுங்கு. (இதைவிடச் சிறந்த உவமை வேறில்லை.)

2 காட்டுப் பன்றியின் பிடரியில் உள்ள மயிர் ஒழுங்கு

3. உரல் போன்ற தலையை உடைய காட்டுப் பன்றி (அருமையான உவமை)

4. புலி.

டாக்டர் மெக்ளீனின்
சென்னை மாகாண ஆட்சித் துணை நூல்*

[நூலகர்]

ஒரு நாட்டை ஆட்சி செய்வதற்கு அந்நாட்டு வரலாறு, மக்களின் மொழி, சமயம், பண்பாடு பழக்க வழக்கங்கள் அனைத்தும் தெரிந்திருக்க வேண்டும் ஒரு நாட்டை அந்நாட்டு மக்களே ஆட்சி செய்வது என்பது எளிது. வேற்று நாட்டினர் ஆட்சி நடதத நேரிடின் மேற் குறிக்கப்பெற்ற அனைத்தையும் அறிந்து வைத்திருந்தால்தான் எளிய முறையில் ஆட்சியை நடத்த முடியும்.

இதனை உணர்ந்துதான் இந்தியாவை ஆண்டு வந்த வெள்ளையர்கள் இந்தியாவின் பல்வேறு மாகாணங்களைப் பற்றியும் பல்வகையான நூல்களை வெளியிட்டனர் அவற்றுள் ஒன்று தான் டாக்டர் மெக்ளீன் தொகுத்து வெளியிட்ட சென்னை மாகாண ஆட்சித் துணை நூல் : இற்றைக்கு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன் 2 500 பக்கங்களில், பூல்ஸ்கேப் அளவில், பொடி எழுத்துக்களில், டாக்டர் மெக்ளீன் தொகுத்துள்ள இந் நூல் உண்மையிலேயே ஒரு மாபெரும் வரலாற்றுக் கருவூல மாகும். இத்தனை ஆண்டுகட்குப்பின் இது போன்ற நூல் பிறிதொன்று வந்ததில்லை. இதன் மறுபதிப்பும் வெளியாக வில்லை. அந்தக் காலத்தில் ஆட்சியிருக்கையில் அமர்ந்திருந்த வர்கட்குத்தான் இந் நூல் தொகுக்கப் பெற்றதென்றாலும் இன்றளவும் இது பயன்படக் கூடிய பெரிய களஞ்சியமாகவே திகழ்கின்றது.

'ஆட்சியின் பல்வேறு துறைகள், ஆட்சி நடத்துவதற்கான அடிப்படைக் கொள்கைகள் முதலியவற்றை ஆட்சிசெய்பவர் களும் ஆட்சித்துறையில் நாட்டமுடைய பிறரும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்கே இந் நூல் தொகுக்கப்பெற்றது. அரசினரின் ஆவணங்களையும் ஆண்டு ஆட்சி அறிக்கைகளையும் புரிந்து கொள்வதற்கும் இந்நூல் துணை செய்யும். இம் மாகாணத்தைப்பற்றித் தெரிந்து கொள்வதற்குத் தனிப் புள்ளிவிவர நூல்கள் (gazetteer) இதுவரை வெளிவராததால் இந்நாட்டின் பூவியல், மக்களியல், வரலாறு போன்ற பல்துறைச் செய்திகள் இதில் கொடுககப் பெற்றுள்ளன.

---

* Manual of the Administration of the Madras Presidency in 3 Volumes. By Dr. Maclean. 1885 - 1893.

ஆட்சித் துறையின் பல்வேறு தலைவர்களும் தத்தம் துறைச் செய்திகளைத் தொகுத்து அவரவர்தம் தலைமையதிகாரி கட்கு அனுப்ப அத் தலைமையதிகாரிகள் கிடைத்த செய்திகளைக் கட்டுரை, பட்டியல் வாயிலாகத் தொகுத்தளித்துள்ளனர்.'

இவ்வாறு இந்நூல் தொகுக்கப் பெற்ற விவரத்தை டாக்டர் மெக்ளின் முன்னுரையில் விளக்குகிறார்.

சென்னை மாகாணம் என்பது அன்றிருந்த பிரிவுபடாத விரிந்து பரந்த சென்னையைக் குறிக்கும். அதில் தமிழ் நாடும் ஆந்திரம் முழுவதும் அடங்கும். கேரளத்தில் ஒரு பகுதியும் கன்னடத்தில் ஒரு பகுதியும் அடங்கும். திராவிட மொழிகள் பயின்று வந்த பெரிய நிலப்பரப்பைக் கொண்டு விளங்கியதால் திராவிட மக்களின் வரலாறு, திராவிட மொழிகளின் வரலாறு, இலக்கியம் ஆகிய அனைத்தையும் இந்நூல் வழியாக நாம் அறிய முடிகிறது.

முதல் தொகுதியில் சென்னை மாகாணத்தின் எல்லைகள், மக்கள் வாழ்வியல், ஆட்சிமுறை, ஊர்காவல், உற்பத்தி பங்கீடு, நிதிநிலை, கலை, அறிவியல், கல்வி முதலிய பலதுறைகளைப் பற்றிய செய்திகள் 652 பக்கங்களில் கொடுக்கப் பெற்றுள்ளன.

பூவியல் பகுதியில் தென்னிந்தியாவிற்கும் கிரேக்க, ரோமானியர்களுக்கும் இருந்த தொடர்பு விளக்கப் பெற்றுள்ளது. தென்னிந்தியாவைப்பற்றிக் குறிப்பிடும் முதல் பூவியலறிஞர் மெகஸ்தனிஸ்தான். அவர் பாண்டிய மன்னர்களைப் பற்றியும் மதுரையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

எரடோசுதனிசு (276 – 196 கி. மு.) குமரியையும் அதனுடன் தொடர்புடைய கொற்கையையும் குறிப்பிடுகிறார். தாம்பிரபரணி கடலுடன் கலக்குமிடத்திலுள்ள கொற்கை முத்து வாணிபத்திற்குப் பெயர் பெற்று விளங்கியது. திராவிடப் பேரரசின் தலைநகராகவும் கொற்கை திகழ்ந்தது என்று குறிப்பிடுகிறார்.

இப்பர்கசு (150 கி.மு.) கிரேக்க சோதிடக் கலையின் தந்தையெனப் போற்றப்பெறுபவர். தென்னிந்தியாவும் ஆப்பிரிக்காவும் ஒன்றாக இணைந்திருந்தன என்ற கருத்து பலநூற்றாண்டுகளாகக் க்ரேக்க மக்களிடையே உலவிவருகிறது என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு 'தமிழகத்தின் பொற்காலம்' என்று போற்றப் பெறும் சங்க காலத்தில் தமிழகத்திற்கும் கிரேக்கத்திற்கும்

இருந்த தொடர்பைப் பற்றிக் கிரேக்க அறிஞர்கள் நூல்களில் காணப்படும் செய்திகளைத் தொகுத்து டாக்டர் மெக்ளீன் இந் நூலில் கொடுத்துள்ளார்.

தமிழகத்தின் வரலாறும் தொடக்க நாள் முதல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. சேர, சோழ, பாண்டியர்கள், பின்னல் வந்த பல்லவர்கள், முகமதியர்கள், பாளையக்காரர்கள் போன்ற அரசு வழிமுறைகள் அனைத்தும் கொடுக்கப்பெற்றுள்ளன.

அடுத்துள்ள பிரிவு நில ஆட்சி முறையை விளக்குகிறது. காவல் துறை, நீதித்துறை, பத்திரப்பதிவுத்துறை, ஊராட்சித் துறை, சட்டத்துறை போன்ற பல துறைகளும் செயல்படும் முறைகள் விளக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறே நிதித் துறை, கல்வித் துறை, கலை, அறிவியல் துறைகள், செயல் முறைகளும் அக்கால அளவை வகைகள், காசு வகைகள் போன்ற பிறவும் இந்நூலின்வழி நாமறிந்து கொள்ள முடிகிறது.

சென்னை நூலகங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் கன்னி மாரா நூலகம் தோன்றிய வரலாறு சுருக்கமாக விளக்கப்பட்டுள் ளது. இன்றுள்ள சென்னை அரசு ஓலைச்சுவடி நூலகம் 1867 இல் சென்னை அரசுக் கல்வித்துறைக்கு மாற்றப்பெற்றது. 1873 இல் அது முதன் முதலாகச் சென்னை மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியரின் கண்காணிப்பின்கீழ் வந்தது. அப்பொழுது அந்நூல் நிலையத்தில் பெரும்பாலும் வடமொழிச் சுவடிகளே இருந்தமையால் வடமொழிப் பேராசிரியரே அதைக் கண் காணித்தார். ஆனல் இன்றோ அதில் பெரும்பாலானவை தமிழ்ச் சுவடிகள் தாம் உள்ளன. இருப்பினும் நூருண்டுகட்கு முன் ஏற்பட்ட முறை இன்னும் மாறவில்லை. இன்றும் அதற்கு வடமொழிப் பேராசிரியர் தாம் தலைவராக அமர்த்தப் பெறுகிருர்.

இரண்டாவது தொகுதியிலும் முதல் தொகுதியில் கூறப் பெறும் துறைகளைப் பற்றிய கட்டுரைகளே காணப்படுகின்றன. 564 பக்கங்களுடைய இத்தொகுதியில் சென்னை மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களைப் பற்றிய செய்திகள் தனித்தனியாகக் கொடுக்கப்பெற்றுள்ளன.

திராவிட மொழிகளின் சொற்பட்டியலும் எழுத்து வகை களும் உச்சரிப்பு முறைகளும் இதில் காணக்கிடக்கின்றன.

தமிழுக்கே உரிய சிறப்பெழுத்தான 'ழ'கரத்தை ஆங்கிலத் தில் எழுத மேனுட்டறிஞர்கள் எத்தனை வகையில் முயன்று

இடர்ப்பாடுற்றனர் என்பதை டாக்டர் மெக்ளீன் பட்டியல் போட்டே காட்டுகின்ருர்.

சீகன்பால்கு	1714	rl, rhl
வீரமாமுனிவர்	1728	lj
பேபிங்டன்	1812	zj
எல்லிசு	1818	zh
ஆண்டர்சன்	1819	rl
பேபிங்டன்	1822	zh
ரேனியசு	1822	rl
கிரௌல்	1854	l
வில்சன்	1855	l,ṛ
கால்டுவெல்	1856	ṛ
போப்	1856	r
ஆட்க்சன்	1856	zy
பிரெஞ்சுக்காரர்கள்		xz

இப் போராட்டம் இன்னும் ஓயவில்லே. இன்றும் பலர் பலவாருகவே ஆங்கிலத்தில் 'ழ'கரத்தை எழுதி வருகின்றனர்.

சில ஊர்களின் பெயர்கள் கொடுக்கப்பெற்று அவற்றுக்கு விளக்கமும் தரப்பட்டுள்ளன. அவ்வாறே தமிழ் நாட்டில் நிலவி வரும் சில சாதியினரைப் பற்றிய விளக்கமும் 'சாதிகளும் இனங் களும்', என்ற தலைப்பில் கொடுக்கப் பெற்றுள்ளன.

மூன்ருவது தொகுதிதான் மிகவிரிவான பகுதி. 1200 பக்கங்களேயுடையது. கலைக் களஞ்சியம் போன்றது. அகர வரிசை முறையில் எல்லாவகையான பெயர்களும் கொடுக்கப் பெற்று அப் பெயர்களைப் பற்றிய விரிவான விளக்கத்தையும் கொடுத்துள்ளார் தொகுப்பாசிரியர்.

இடப்பெயர், ஆட்பெயர், செடிப்பெயர், ஊர்ப்பெயர், உறவு முறைப்பெயர், மரப்பெயர், அளவைப்பெயர், பல்வேறு சாதிப் பெயர், இனப்பெயர், இலக்கணச் சொற்கள், புலவர் பெயர், இலக்கிய இலக்கண நூலகளின் பெயர், பூக்களின் பெயர் போன்ற எல்லா வகையான திராவிடமொழிப் பெயர்களையும் காணலாம்.

ஒவ்வொரு பெயருக்கும் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி, சமற்கிருதம், உருது, ஆங்கிலம் போன்ற

மொழிகளில் வழங்கும் பெயர்கள் அந்த மொழிகளின் வரிவடிவங்களில் கொடுக்கப்பெற்றுள்ளன.

நூலில் ஆங்காங்கு திருக்குறள், நாலடியார், சிந்தாமணி போன்ற இலக்கியப் பாடல்களும், சிவவாக்கியர் போன்ரேரின் சமயப்பாடல்களும் தமிழ்ப் பழமொழிகளும், கல்வெட்டுச் சாசனங்களும் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன. அத்தனை மேற்கோள்கட்கும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் ஆங்காங்கு உள்ளன.

திருக்குறள் மொழிபெயர்ப்பு துறு ஐயர் (Rev. Drew) லாசரசு செய்ததாகும். அவ்வாறே பழமொழிகட்குப் பெர்சிவல் செய்த மொழிபெயர்ப்பு உள்ளது. இவையல்லாத பிறவற்றை வேறு சிலர் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

கம்பரின் மகன் அம்பிகாபதி பாடிய கீழ்க்கண்ட பாடலும் மேற்கோளாகக் கொடுக்கப் பெற்றுள்ளது,

எரியு தெரியுதென் னுள்ளி ரலைப்பற்றி
யெரியு தவியுதில்லை யென்செய்வேன் —பொறியரவின்
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்ணணங்கு
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

இதனைக் கீழ்க் கண்டவாறு சுவைபட மொழிபெயர்த்துள்ளனர் நூலில் :

What can I do? The fire which the divine damsel with venomed eyes has kindled in my heart burns within me, it burns without extinguishing.

அம்பிகாபதியின் மற்ருெரு பாடல்:

வில்லம்பு சொல்லம்பு மேதினியி லிரண்டுண்டு
வில்லம்பு சொல்லம்பை வெல்லாது—வில்லம்பு
பட்டதடா வென்மார்பிற் பார்வேந்தே யுன்கிளையைச்
சுட்டதடா வென்வாயிற் சொல்.

There are two kinds of arrows on earth, of which one is shot out from the bow, and the other from the mouth, O king! thine arrow from the bow has hit my breast, but mine, the word of my mouth, has burnt up thy race.

இவ்வளவு சுவையான செய்திகள் நிறைந்த இந்நூல் வற்ருத கருவூலமேயாகும்.

———

தமிழில் எழுதுவோம்

[ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார் எம். ஏ.]

(முன்பரல் ௬௦௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

11. நிறைவு விரைகுவம்

1. இத்தனை யாண்டுகளா?

மொழி உரிமையில்லாத, நாட்டுரிமையால், முழுப்பயன் விளையாது என்பது ஓர் அடிப்படை உண்மை. நாடு அயலவர் ஆட்சியிலிருந்து 1947 இல் விடுதலை பெற்று, இன்றைக்கு இருபத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன. மக்களாட்சி என்பது மக்களுடைய மொழியில் ஆட்சிபுரிவது என்பதை எவரும் மறுக்க முடியாது. நம் நாடு மக்களாட்சி பெற்று இன்றைக்கு இருபத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. நமது நாடு, மக்களால் ஆளப்பெறும் ஒரு குடியரசு நாடு என்று வகுத்துக் கொண்ட 1950 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அந்தந்த மாநிலத்தின் மொழி, அந்தந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்ட வண்ணம், நமது தமிழகத்தின் அரசாளும் மொழி, தமிழாகும் என்று தமிழக அரசு 1956 இல் சட்டம் செய்து பதினெட்டு ஆண்டுகள் சென்று விட்டன. சட்டத்தைச் செயலாக்க ஒரு பெரிய அலுவலர் தலைமையிலே 1957 இல் ஆட்சிமொழிக்குழு ஒன்று அமைத்துப் பதினேழு ஆண்டுகள் நகர்ந்து கடந்தன. அச்சட்டத்தின்படி, 1958 இல் தைப்பொங்கல் திருநாளிலிருந்து மாநில முற்றுமுள்ள சிறு அலுவலகங்களில் ஆங்கிலத்துக்கு மாற்றாகத் தமிழைப் பயன்படுத்துமாறு ஆணைபிறப்பித்துப் பதினாறு ஆண்டுகளுக்கு மேல் கழிந்துபோயின. மாவட்ட நிலையிலுள்ள எல்லா அலுவலகங்களிலும் தமிழை ஆட்சிமொழி யாக்கிய அரசாணைகள், படிப்படியாகப் பிறந்து 1963 க்குள் மாவட்டங்கள் முழுதிலும், தமிழை அரியணையில் அமர்த்திப் பதினோர் ஆண்டுகள் நகர்ந்து சென்றன. மாநில நிலையிலுள்ள துறைத் தலைமை அலுவலகங்களிலும், பிறகு அமைச்சகத்திலும், (Secretariat) தமிழ், ஆளும் மொழியாகும் அரசாணைகள் 1971 லேயே நிறைவுற்று மூன்று ஆண்டுகள் நிறைவுறுகின்றன.

இத்தனை யாண்டுகளா தமிழ்த்தாய் அரசு கட்டிலில் நிறைவுற அமர என்று எண்ணமிடுவோம்.

இத்துணை வசதி வாய்ப்புக்களா?

ஆங்கிலச் சொற்களுக்கு நேரான, தமிழ் ஆட்சிச் சொற்களைத் தொகுத்து ஆட்சிச்சொல் அகரவரிசை போன்று 1957 லேயே வெளியிடப்பெற்றது. இதனை விரிவும் விளக்கமுமாக்கி, இரண்டாம் பதிப்பு வெளியாயிற்று. மேலும் செம்மை செய்து, மூன்ரும் பதிப்பும் வெளிவந்தது. ஒவ்வொரு துறைக்கும் தேவையான தனிச் சொற்களைத் தொகுத்துத் தனித்தனி யகராதிகளாக அரசினர் வெளியிட்டனர்.

தமிழ்த் தட்டச்சுப்பொறியைச் சீர்செய்து பிற இந்தியமொழிகளில் உள்ள மொழிகளைக் காட்டிலும் வசதியும் எளிமையும் பூண்டதாக ஆக்கினர். அப் பொறிகளை இவ்வாறு திருத்திய முறையிலே செய்து வழங்க, உரிய வணிகர்களைக் கேட்டனர். அவ்வண்ணமே பொறிகள் கிடைத்தன. மாநிலம் முழுதிலுமுள்ள, அரசலுவலக ஆங்கிலத் தட்டச்சர்கள் ஓர் ஆயிரவர்க்கு அப் புதுப்பொறியில் 1959—60 இல் இலவசப் பயிற்சி அளிக்கப் பெற்றது. தங்கப்பதக்கங்களும் பிறவும் பரிசுகளாக வழங்கினர். அப்போது பயிற்சி வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள இயலாமற் சென்ற தட்டச்சர்கள், தனித்தட்டச்சுப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவதற்குப் பொருளுதவி அளித்து வருகின்றனர். தமிழ்த் தட்டச்சர்களுக்குத் தனி ஊதியம் தரப்பெறுகின்றது.

தமிழ் சுருக்கெழுத்து நூல் 1965 இல் செப்பனிட்டு வெளியிடப் பெற்றது. ஆசிரியர் உதவியின்றித் தாமே பயின்று கொள்வதற்கு ஏற்ப எளிதாக்கினர்.

30—11—1957க்கு முன் அரசுப் பணியில் சேர்ந்த, தமிழ் தெரியாதவர்களுக்கு ஆசிரியர்களை அமர்த்தித் தமிழ் கற்றுக் கொடுத்து, ஆட்சிமொழிப் பயிற்சியளிக்க ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டது.

தமிழில் வரைவுகள் குறிப்புகள் எழுதப்பயிற்றுவதற்கு அமைச்சகப் பணியினர்க்கும், கருவூலக்கணக்கு இயக்க சம்பளம் கணக்கு அலுவலகப் பணியினர்க்கும், மாலை நேரப் பணியிடைப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பெற்றன.

தமிழ் வளர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப் பெற்றது. ஆட்சிமொழிக்குழுவின் பணியை அவ்வியக்கம் ஏற்று நடத்தலாயிற்று. ஆட்சிமொழிக்குழு, மொழி பெயர்த்துவித்த சட்டங்கள், விதித் தொகுப்புகள், படிவங்கள் பிறவற்றைத் தொடர்ந்து ஒருவருக்கு

மூவரை மொழிபெயர்ப்பு அலுவலர்களாக அமர்த்தி மேலும் மொழி பெயர்ப்புப் பணி நடைபெற்றுவருகிறது.

1968இல் சட்டப்பேரவை, ஆட்சிமொழிச் சட்டத்தை விரைந்துபயன்படுத்தி நிறைவு எய்த ஒரு தீர்மானம் இயற்றியது.

குற்ற இயல் (criminal), உரிமைஇயல் (civil) அறமன்றங் களிலும், அவை போன்ற அறக் குழுக்களிலும் வாக்கு மூலங் களைத் தமிழிலேயே பதிவு செய்ய ஆணை பிறந்தது.

அறமன்றங்களில் தமிழையே பயன்படுத்துவதற்கு முன்ன ணித் தேவையாக, அடிப்படைச் சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும், அதற்கு ஆன சட்டச் சொற்களை அமைக்கவும், சட்டச் சொல் ஆணைக்குழு (Legal Terms Commission ஒன்று அமர்த்தப்பெற்று இனிது பணியாற்றிவருகிறது.

தமிழில் சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதுவோர்க்குப் பணம் (ரூ 500/-) பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப் பெறு கின்றன. மாநிலத்திலுள்ள அரசலுவலகங்களில் உள்ளவர் களுக்கு மாவட்டத்துக்கு ஒரு பரிசும் மாநகராட்சிகளுக்கு இரு பரிசும் ஊராட்சி ஒன்றியம் நகராட்சி நகரியம் இவற்றிலுள்ளவர் களுக்கு தனித்தனியே மாவட்டத்துக்கு ஒரு பரிசும் சென்னையி லிருப்பவர்களுக்கு இரண்டு பரிசும், அமைச்சகத்துக்குத் தனிப் பரிசும் ஆக, பல பரிசுகள் வழங்கி ஊக்கமளிக்கின்றனர்.

அலுவலகங்களில் தமிழ்த்திட்டம் செயற்படும் முறையும் அளவையும் ஆய்ந்து கண்டு அவற்றை வளமுறுத்தி விரைவுப் படுத்த முதலில் அமர்த்தப்பெற்றிருந்த ஒரே ஒரு ஆய்வுத் தனி அலுவலர் பணியை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒருவராக இப்போது பல அலுவலர்கள் ஏற்று நடத்தி வருகின்றனர். இதனால் தமிழில் திருத்தமாகவும் விரிவாகவும் எழுதுவதற்கு வாய்ப்பு மிகுகின்றது மாநில நிலையிலுள்ள அலுவலகங்களையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும், அமைச்சகத்துறைகளை யுங் கூடத் தமிழ் வளர்ச்சி இயக்குநரே நேரில் ஆய்வுசெய்து, வழி முறை தெரிந்து வருகிறார்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களே உயர் அலுவலர் களுக்கு நேர்முகச் சுற்றறிக்கை யனுப்பித் தமிழில ஆட்சி மாறு வதை விரைந்து முழுமையாக்குமாறு வேண்டியிருக்கிறார்.

இத்துணை வசதி வாய்ப்புகளா தமிழ் அன்னை அரியணையில் ஏறியமர என்று விம்மிதமடைவோம்.

இன்னுமா தயக்கம்?

இத்தனை ஆண்டுகள் ஆகியும், இத்துணை வசதிகள் வாய்ப்புகள் இருந்தும், இன்று பெரும்பாலான அலுவலகங்களில், தமிழ்மொழி ஆட்சிக்குப் பயன்படும் அளவை நுணுகிப் பார்ப்பவர்க்கு, ஏமாற்றம் தோன்ருமல் இராது. இன்னும் ஏன் தயக்கம் என்போம் எவரால் ஏற்பட்ட தயக்கம் இஃது என்று எண்ணவும் செய்வோம்.

தமிழ் தெரியாதவர்கள் மீதோ, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் மீதோ இக்குறையைச் சுமத்துவது பொருத்தமாகாது. அவர்களுக்கு இயல்பாக இத்துறையில் மெத்தனம் ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனல், அத்தகையவர்களும் ஆர்வங் கொள்ளாமல் இல்லை. உண்மை முயற்சி செய்யாமல் இல்லை. இதனை, அவர்களை நேரில் அறிந்தவர்கள் அறியக்கூடும். அவர்களது இயலாமையே, அவர்கள் இவ்வகையில் வளர்ச்சி காட்டுவதற்கு முடியாமல் இருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். அவர்களும் இன்னமும் உறுத்த முறையில் ஊக்கமும், உழைப்பும் பூணவேண்டும் என்று எதிர்பார்ப்போம்; வேண்டுவோம்.

பின்னை பெருங்குறை எவரிடத்தே இருக்கின்றது, என்று எடுத்து ஆய்ந்தால், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே பொறுப்பாளிகள் என்பதையறிவோம். தமக்கு உரிய மொழியில், தம் அன்னைமொழியில் வரைவுகளையும் குறிப்புகளையும் எழுதுவதில் அவர்கள் போதுமான அளவு முனைப்புக் கொள்ளவில்லையென்பதை அவர்களே உணரவேண்டும். சில எழுத்தர்கள் சொல்வதுபோல, மேல் அலுவலர்களின் ஆதரவின்மையே தமிழில் எழுதுவதற்கே தடையாவது என்னும் காரணத்தை முற்றுமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஓரளவு அஃது உண்மையாக இருக்கலாம். இருக்கின்றது என்பதை நானும் நேரில் கண்டிருக்கிறேன். என்ருலும் தமிழ் அன்னைமொழியாகக் கொண்டவர்கள் ஆர்வம் மீதூரப்பெறவில்லை என்பதையும் நான் அறிவேன்.

இஃது அரசப்பணி, சட்டப்படி செய்யவேண்டிய வேலை. இதில் பின்னிடைவது குற்றமாகும் என்னும் உணர்வு அனைவருக்கும் இருக்கவேண்டும். மேல் அலுவலர்களும் தங்களால் சரிவர நிறைவுற வரைய இயலாவிட்டாலும் கீழுள்ளவர்களுக்கு இத் துறையில் வளம்பெற, ஊக்கம் அளிப்பதில் பின்வாங்கக் கூடாது. அவ்வாறு ஊக்கம் அளிப்பது தாமும் தமிழில் எழுது

வதில் அறிவைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பாகும் என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்.

மேலும் முன்னே குறித்தபடி இது ஒரு சட்டப்படியான கடமை. தமிழை ஆட்சிமொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்பது அரசு ஆக்கிய சட்டம். அச் சட்டத்தின்படி அரசிதழில் வெளியிட்ட அறிவிக்கையைச் சார்ந்ததே. தமிழ், அலுவலகத்தில் அரசுப் பணிகளுக்குப் பயன்படுத்தப் பெறுகிறது. அவ் வறிக்கையில் Tamil shall be used என்னும் வாசகம் வருவதை நினைவில் இருத்திக் கொள்ளவேண்டும். Tamil may be used என்று அவ் வாசகம் இல்லை. அறிவிக்கையென்பதும் சட்டத்தின் ஆற்றலையுடையது. கட்டாயம் பயன்படுத்தவேண்டும் என்று விதிக்கும் அறிவிக்கையின் கட்டளையை மீறுவது சட்டத்தை மீறுதலேயாகும். சட்டம் மீறினால் தண்டனை; தமிழில் எழுதா தற்கு அரசு தண்டித்துவிட்டால் அது தவறாகாது. இவ்வுண்மை நிலையை உள்ளவாறு, மேல் அலுவலர்களும், கீழுள்ளவர்களும் உணர்ந்து செயற்படவேண்டும்.

iv. வற்புறுத்தவா வேண்டும்?

அரசு வற்புறுத்தித் தமிழில் எழுதச் சொல்ல வேண்டும் என்று எண்ணுவது கூடாது. மனக்கசப்பை உண்டாக்காமல், சட்டத்தைச் செலாவணி செய்ய முயல்வதே அரசின் பெருந் தன்மை. இதனை மறந்து ''திடும்'' எனப் பாய்ந்து கடும் நடவடிக்கை எடுத்துவிட்டால், எவரும் அரசினைக் குறைகூற முடியாது. அரசின் பெருந்தன்மையை அலுவலர்களும் பெருந் தன்மையோடு நோக்கி அப் பெருந்தன்மை கடுந்தன்மையாகி விடாதபடி காத்துக் கொள்ளவேண்டும்.

காலத்துக்கும், அரசு பொறுமையாகப் பார்த்துக் கொண்டு இருந்துவிடும் என்று எதிர்பார்ப்பது மடமை. அரசியலில், இத் துறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை யறிந்தார் அறிவர். மொழிச் சிறுபான்மையினர் ஒருபுறம், மைய அரசின் மொழிக் கொள்கை மறுபுறம், தமிழர்களின் அசட்டுத்தன்மை பலபுறம். இந் நிலையில் அரசு மிக விழிப்பாகவும் நுட்பமாகவும் செயற்பட வேண்டியுள்ளது என்பதை யறிய வேண்டும்.

v. தமிழர்கள் கடமை

தமிழ் மக்கள் விழித்தெழுந்தால், இத் துறையில் விரை வான வளர்ச்சி காணலாம். அலுவலகத்தில் உள்ள தமிழர்

களுக்கு இருக்கும் சில இன்னல்களை மேலே குறிப்பிட்டேன். அவர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதுவது எளிதாக இருக்கலாம்; முன்தாள்களைப் (Precedents) பார்த்துப் படியெழுதிவிட வாய்ப்பு இருப்பதால் தமிழில் தாமே சிந்தித்து வரையவேண்டியுள்ளது. இன்னன பிறவும் அவர்கள் தமிழில் கொள்ள வேண்டிய அளவு ஆர்வம் கொள்ளாமல் இருக்க இடை நிற்கலாம்.

ஆனால், பொது மக்கள் இது பற்றி முனைய வேண்டும். அரசியல் கட்சிகள் முனைய வேண்டும். அரசினர்க்கு இவர்கள் அனைவரின் முனைப்பும் ஆதரவாகத் துணை நின்று தோன்றற்பால எதிர்ப்புகளை எளிதில் சமாளித்து வெற்றிகாண வாய்ப்பாக அமையும். அரசு என்பதே பொது மக்கள் தாமே! மக்கள் தம் வாக்குகளை அளித்த அரசுத் தன்மையை யேற்றே அரசு ஆட்சி புரிகிறது என்பதை மக்கள் நனி உணர வேண்டும்.

சட்டப்படி தமிழன்னையை அரசு கட்டிலில் ஏற்றி, நம் தாய் திருத்தமுற அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிய ஆணை செய்ய வேண்டியது மக்கள் கடமையேயாகும். மக்கள் முனைந்தால் இன்னும் சில காலத்துக்குள்ளேயே தமிழில் ஆட்சி நிறைவு எய்தும். எல்லாத் துறைகளிலும் தமிழ் ஆண்டு மகிழ் விக்கும்.

எல்லா வகைக்கும் உடனடியாகத் தமிழுக்கு மாறும்படி வலியுறுத்திப் பேசியும் எழுதியும் நேரில் கண்டு எடுத்துரைத்தும் வேண்டிக்கொள்ள வேண்டும். தமிழிலேயே ஆணைகள், அறிவுப்புகள் யாவும் வரவேண்டும் என்று எடுத்துரைக்க வேண்டும். விரைவில் நிறைவுறுவோம் என்பது திண்ணம்.

———

ஒருமொழி, பிறமொழிச் சொற்களை எடுத்துச் சேர்த்து வழங்கல் வேண்டுமாயின், அம்மொழி உயர்ந்த நாகரிக வாழ்க்கைக்குப் போதுமான சொற்கள் அமையப் பெறாததோர் ஏழை மொழியாக இருத்தல் வேண்டும். ஆங்கில மொழியானது மிகவும் ஏழை மொழியாயிருத்தலின், அதன்கண் இலத்தின், கிரீக் முதலிய பிறமொழிச் சொற்களைச் சேர்த்து வழங்குகின்றனர். ஆங்கில மொழியிலிருக்கும் கிரீக், இலத்தின் முதலிய பிறமொழிச் சொற்களை வேறு பிரித்தெடுத்து விட்டால், அதனைத் தனியே வழங்குதலும், அதன்கண் நூல்கள் எழுதுதலும் இயலா.

—மறைமலையடிகள்

தனித்தமிழ்க் கட்டுரைகள், பக். 41.

ஆப்பிரிக்கச் சுற்றுலா

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ௩௯ஆம் பக்கத் தொடர்ச்சி)

18. அலைகடல் முன்னே ஆர்வக்கூத்து

கேப் டவுன் முழுதும் இரவும் பகலும் ஒரே வெளிச்சம், அது கிறிஸ்தமஸ் நாளாதலால், இரவில் வண்ண வண்ண, வட்ட வட்ட ஒளிப்பொலிவு கண்கொளாக் காட்சி. மண் கொளா மாட்சி, எத்தனை அரங்குகள், எத்தனை ஆபராக்கள், நாடகங்கள், ஆடல் பாடல் களியாட்டம் கொண்டாட்டம்—எல்லாம் வெள்ளைத் திருமேனிகளின் நாட்டமே, ஆட்டமே. நம்மவருக்கும் ஏதோ எளிய முறையில் கலையின்ப நுகர்வுண்டு. எனது இசை விருந்து மாலைதோறும் எங்கே இருந்தாலும் நடந்தது. இசைக் கருவிகள் உடன் வந்தன.

கேப் டவுன் மலைக்காட்சி பெருமித அழகுச் சிறப்புடையது. இந்த அழகான குறிஞ்சி நிலத்தில் முன்பே தமிழ் வணிகர் வந்ததுண்டு. அந்தோ மலைமேல் ஒரு முருகன் கோவிலாவது கட்டினரா? இல்லை, இல்லை. இனி எங்கே!

கேப் மாநிலமே தென் ஆப்பிரிக்காவில் மிகப் பெரிது. ஆப்பிரிகான்ஸில் இதை காப்ரோவின்ஸி (Kaaprovinsie) என்றழைப்பர்.

இங்கே எல்லையற்ற இந்துக் கடலும், அட்லாண்டிக் கடலும் கைகோத்துக் களிநடம்புரிகின்றன. நீண்டு உயர்ந்த டேபிள் மலையிலிருந்து கடலை நோக்குவோமா. சிறிது ஆப்பிரிகான்சும் தெரிந்தால் நல்லதுதான். ஏனெனில் அதுவே இங்கே பொதுவே! ஆங்கிலங்கூட மெதுவே!

இங்கே புஷ்மென், ஆட்டன்டாட்ஸ், பண்டுஸ் ஃசோசா (Xosa), ஃசூலு (Zulu) இனத்தின் பழங்குடி மக்கள்—அதோ அவர்கள் கடல் துறைகளில் குதித்துக்குதித்து நீந்திவிளையாடுகின்றனர். குளிக்கக்கூட வெள்ளையர் பகுதி அதோ. பண்டுக்கள் துறை இதோ. நிறத்தினர் பகுதி இன்னும் தள்ளி! இந்தியர் துறை இன்னும் தள்ளி! அதோதோ தோதோ!

The Cape of Good Hope 1487ஆம் ஆண்டு பர்தலோமியோ டியாகஃச் (Barthalomew Diaz) என்னும் போர்த்துகீசியர் சுற்றி வந்தார். அக் கால அரசன் ஜான் II அதை நன்னம்பிக்கை முனை Cape of Good Hope என்றழைத்தான். அதுவே இந்தியாவுக்கு, வாஸ்கோடிகாமா வர வழி

வகுத்தது. தமிழ் வணிகரும் இங்கே வந்ததாகத் தெரிகிறது. ஆனால் அவர்கள் இருந்த தடம் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பெற்றது. அதிட்டம் வெள்ளை வீரருக்கே! பதினாறுவது நூற்றாண்டில் வெள்ளைக்காரர் கப்பல் கப்பலாக வந்து குவிந்தனர். பதினெட்டாவது நூற்றாண்டில் அவர்கள் உலகை ஆண்டனர். வாகை பூண்டனர். நாட்டைப் பண்படுத்தினர், சுரங்கம் தொட்டனர். தங்கமும், வைரமும் அகழ்ந்தெடுத்தனர், கடை விரித்தனர்; இந்தியக் கூலிகளையும் ஆப்பிரிக்கத் தொழிலரையும் கொண்டு காடு திருத்திப் பசுமையாக்கி, கரும்பும் நெல்லும் விளைவித்தனர். பல தொழில் வகுத்தனர்; முன்னேறினர். உழைத்தவர் எல்லாம் தமிழரே. டேபிள் வளைகுடா நெடுக மலைத்தொடரே. அதில் மூலைமுடுக்கெல்லாம் உந்தியிற் சென்று கண்டு வியக்கிறோம். எங்கும் மலை மாளிகைகள், பூங்காக்கள், விலங்குப் பண்ணைகள். முனை சுற்றி இயற்கைக் காட்சிகளை ஆயுளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். காதில் விழுவதெல்லாம் ஆப்பிரிகான்ஸ் அல்லது ஆங்கிலம், சில சமயம் பிரெஞ்சு, ஜர்மன் அவர்கள் மொழியை அப்படி வளர்த்தனர்.

மலையடிவாரத்தில் Groot Constantia (கோன்ஸ்தான்சியா முழை) என்ற ஓர் வியன்பெறும் மாளிகை உள்ளது. உள்ளே அழகான வானுயர்ந்த பல மரத் தோட்டமும், அரமியமும் உள்ளன. பழைய போர்த்துகீசிய அரசரும், ஆணையாளரும் இருந்த இடம், அமர்ந்த நாற்காலிகள், படுத்த கட்டில்கள், அலங்காரப் பேழைகள், போர்க் கருவிகள், உண்ட கலங்கள், குடித்த அணிமணிக் கோப்பைகள் எல்லாம் அங்கே காண்கிறோம். இன்று அங்கே வீறுவிறு சாராயம் காய்ச்சிப் புட்டி புட்டியாக விற்கின்றனர். அதை வாங்கும் கூட்டக் கும்மாளமே அதிகம். அந்தக் காலம் குடித்துக் களியாடி சோடி நடம் புரியும் கூடம் இன்று சாராயப் பேழைகளால் நிரம்பி நுரைக்கிறது. ஆனால் எங்கும் இத்துடன் அதுவும், சர்ச்சும் இணைந்தே அமைந்துள்ளது. ஸர் பிரான்ஸிஸ்டிரேக் (Sir Francis Drake 1577-80) இந்த முனையைச் சுற்றி உலகிற் சிறந்த அழகில் உயர்ந்த முனை என்றான். இந்த முனை மலையில் ஏறத் துடிக்கிறோம். அதற்கு விஞ்ஞானம் ஒரு வண்டியை அமைத்துள்ளது. அதன் பெயர் பறக்கும் டட்சுமான் (Flying Dutchman). மலைமேல் சுமார் 500 அடி உந்து வண்டி செல்லும். அங்கிருந்து பறக்கும் டட்சுமான் வண்டியில் ஏறவேண்டும். அது நம்மை 700 அடி உயர இழுத்துச் சென்று மலை உச்சியில் உய்க்கும். இரவும் பகலும் இந்த வண்டி மின்சக்தியால்

நூற்றுக்கணக்கான பயணிகளை உந்தி வந்து கொண்டிருக்கிறது.

நாங்கள் அறுபது நண்பர் அதில் ஏறி அமர்ந்தோம். கடகட கரகரப் பாறைகளில் வண்டி இழுவுண்டு மேலேறுகின்றது. இறங்கினோம். எங்களுள் ஒரு ஜர்மானியர் ரிச்சாட் வாக்னர் எழுதிய டெர்ஃப்லைஜெண்ட் ஒல்லாந்தர் (Der fliegende Hollander) என்ற ஆபராவிலிருந்து சில வரிகள் பாடி யாடிக் களிதுள்ளினர். 1843 ஆம் ஆண்டில் எழுதப் பெற்ற இந்த இசை நாடகம் கேப்மலை பற்றியது. காப்டன் வாண்டர்டெக்கென் பதினேழாம் நூற்றாண்டில் அலைபுயல் அமர்க்களமான இம் முனையைச் சுற்ற முனைந்தான். "கடவுள்கூட என்னைத் தடுக்க முடியாது" என்றான். அவனை ஒரு பேய்ப்படகில் வைத்து அலையில் சுற்றிக்கொண்டேயிரு. நம்பிக்கை என்ற பெண் எதிர்வாள். அவள் உனக்கு இனிதாவாள் என்று அரசாங்கம் கடலில் விட்டது. அவன் படகும் பாய்மரமும் புயலில் அலைந்து குலைந்து உலைந்து மலைந்து கலைந்து நலிந்த பிறகு நன்னம்பிக்கை வந்ததாம். ஆபராக் கதையை ஜெர்மானிய நண்பர் சொல்லி என்னிடம் அவரது தொலைநோக்கியைத் தந்தார். நான் கோட் மிட் அன்ஸ் (gott mit uns god with us) என்று ஜர்மனியில் சொல்லி இன்னும் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், இந்தி, தமிழ்ப் பயணிகளுடன் மலைஉச்சியில் நின்றேன். அடடா அடடா கண்காணும் திக்கெங்கும் எல்லையற்ற வான் வணங்கிக் கொஞ்சும் எல்லையற்ற கடலின் கும்மாளம் கொட்டு முழக்கு குதிப்பு கனைப்பு, களிப்பு!

கர்ச்சனை செய்கடலே—சுதந்தர
கர்ச்சனை செய்கடலே—சமரசக்
கர்ச்சனை செய்கடலே—சிவோஹம்
கர்ச்சனை செய்கடலே
சச்சிதானந்தம் பரம்பொருள் ஒன்றென
கர்ச்சனை செய்கடலே—உலகிற்கு
கர்ச்சனை செய்கடலே.
தட்டுத் தடைகளை முட்டி யெறிந்தின்பத்
தாண்டவம் செய்கடலே—பரவசத்
தாண்டவம் செய்கடலே—கைகள் கொட்டித்
தாண்டவம் செய்கடலே
கட்டுகள் விட்டு விடுதலை யாம்வழி
காட்டிடும் கடலே—கவலையை
ஓட்டிடும் கடலே—ஞானக்கனல்
மூட்டிடும் கடலே.

நாதவெளியிலே வேதப் பொருள்பாடி
நர்த்தனம் செய்கடலே—புயலில்லை
மத்தளம் கொட்டிடவே—மீனினம்
தத்திக் குதித்திடவே

ஆதிபராசக்தி உன்னுருக் கொண்டனள்
அருட்பெருங் கடலே—வணக்கம்
ஆர்வப்பெருங் கடலே—உன்னுடன்
ஆடிமகிழ்ந் திடுவேன்.

என்று தமிழில் நான் பாடியது மற்ற மொழியினரையும் காலுயர்த்தி ஆடச்செய்தது. ஆங்கிலம் ஆங்கிலம் என்று கூச்சலிட்டனர். இனிய நல்ல செய்ய தூய்ய நண்பர்;

ஆங்கிலம் முத்தாளம் தெறிக்கிறது!

O Lashing splashing
Laughing Sea
Singing day and night
so care free
Beneath the shining
silent sky
Your moon—Kissed bosom
waxes high
A mighty age—long
mystery
The gemmed book
of history
Rolls whirling with
Your writing waves
Revealing secrets
of your caves!
Songs bust out of
your tossing heart
The Sun weaves clouds
by your contact
Deep deep we dive;
deeper you seem
With your million tongues
We chant Aum
And become calm!
Aum:

நூறு கைகள் சடசடக்கின்றன. பெண்கள் இந்தப் பாட்டை எழுதிக் கொண்டு இனிமையாகப் பாடினர். ஆண்கள் நடனமாடினர். பிறகு சிற்றுண்டி. பிறகு நடனம். அங்கே முதலில் ஒரு பெரிய கலன்கரை விளக்கு (Light House) இருந்தது. 50,000 மெழுகுத்திரி பொலிவம் (Candle power light) பாரஃபினல் எரிந்தது. ஆனால் அப்படியிருந்தும் 1911இல் லூசிடானியா (Lusitania) என்ற போர்ச்சுகீஸ் கப்பல், 5557 டன் 774 மக்களுடன் அந்தக் கடலோரம் வந்து பெல்லோஸ் பாறையில் மோதிப் பக்குவிட்டுப் பாதாளத்தில் ஆழ்ந்தது. ஏனெனில் கலன்-விளக்கு கதிர் பரப்பியது போதாது. ஆதலால் 1936இல் 19,000 000 மெழுகுதிரிப் பொலிவம் கொண்ட மின்கல விளக்கு, உலகிலேயே ஒளிமிக்கது நாட்டப் பெற்றது. அது 23 மைல் சுற்றிக் கதிரிடும். மற்றொரு செவ்வொளி பத்து மைல் சுற்றி மிளிரும். மின்கல விளக்கு இயக்குநர் மேலேயே உறைவர்.

கீழே பாருங்கள். 40 அடி வாயைப் பிளந்து 200 அடி ஆழம் உள்ள ஒரு குகை தோன்றுகின்றது இதனை அணித்திருப்பதே ஃபால்ஸ் பே (False Bay). அதை நோக்கி 880 அடி நிவந்த மலையுச்சிதான் வாஸ்கோடிகாமா முடி. அதை ஒட்டி கானன்கோப் பால்ஸ்பெர்கு, டைபோர், ஐஇடாஸ் பீக் (1077 அடி) ஆகிய திருமுடிகள் வரிசையாகக் காண்கின்றன.

இன்னும் மேலே செல்வோம். வாஸ்கோடிகாமா, பாறையில் வழுவழுக் கல்லில் ஒரு பெரிய திசைக் கருவி வட்டமாக அமைந்துள்ளது. அதன் சுற்று வட்டத்தில் உலகத் தலைநகர்களும், இங்கிருந்து அவை உள்ள தொலைவும் துலங்கும். உலகம் முழுதும் அங்கே காண்கிறோம். அறிவு, அறிவு, அறிவு எங்கும் அறிவின் கருவூலம். ஐயோ அறிவுக் கடல், ஆழ முழக்குகிறது. நலம் அதன் அலைகளைக்கூட அஞ்சிப் பதுங்குகிறோமே! நன்னம்பிக்கை முனையில் எல்லையற்ற அலைகடல் முன்னே உளங்குவிந்து தியானித்து மோனத்தில் ஆழ்ந்து அமைதி கண்டு, சோலையழகினூடே உந்திவந்து வீடு சேர்ந்தோம். மாலைக் கூட்டம் மங்கலமாக முடிந்தது. மறுநாட்காலை விமான நிலையத்திலிருந்து நேராகக் கிம்பர்லிக்குப் பறந்தோம். வாருங்கள் வைரத் திருநகர் கிம்பர்லிக்கு.

(தொடரும்)

———

மறைமலையடிகள் நூல்நிலையம்

105, இலிங்கிச்செட்டித் தெரு, சென்னை–1.

திருக்குறளை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த டாக்டர் போப் திருவுருவம் அஞ்சற்றலையில் வரவேண்டாமா?

சமற்கிருத வேதங்களையும், உபநிடதங்களையும், இதிகாசங்களையும் "Sacred Books of the East" என்ற தலைப்பில் மொழிபெயர்த்தியற்றிய 'மாக்சுமுல்லர்' (MAX MULLER) திருவுருவம் 15-7-74இல் ஒரு ரூபா மதிப்புள்ள சிறப்பு அஞ்சற்றலையில் வெளியிடப் பெற்றுள்ளது. அதற்குக் காரணம் சமற்கிருத அறிஞர்கள் செய்த முயற்சியேயாகும்.



சொல்லுக்குறுதியூட்டும் திருக்குறளையும் நாலடியாரையும், உள்ளத்தை உருக்கும் திருவாசகத்தையும் டாக்டர் போப் (Dr. G.U. POPE) அவர்கள் மொழிபெயர்த்து உலகிற்குத் தமிழொளி ஊட்டியவர். தமிழ்மொழி இலக்கணவரம்புடையது என உணர்ந்து இலக்கண நூல்களை முதன்முதல் எழுதியவர். சமயங்களில் சைவசித்தாந்தத்தையும், வேதாந்தத்தையும் திருந்தக் கற்றவர். புறநானூறு, பழமொழி நானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை முதலியவற்றை நன்கு ஆய்ந்தவர். தாம் வாழ்ந்த 88 ஆண்டுகள் வரை தமிழுக்காகவே உழைத்தவர். உவின்சுலோ அகராதியில் இல்லாத சொற்களையெல்லாம் அவர் தொகுத்து வைத்தமையே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) வெளிவருவதற்கு வாயிலாக இருந்தது. தமது கல்லறையில் தம்மைத் 'தமிழ்

மாணவன்' என்று பொறிக்குமாறு கூறினர். ''மறுவுலகினும் தமிழிலேயே தமிழறிஞர்களோடு பேசி மகிழ்வேன்'' என்று பூரிப்போடு கூறியவர். அவர் தமிழ்த் தொண்டைப் பாராட்டி ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் 'டாக்டர் பட்டம்' வழங்கியதே யன்றிச் சென்னைப் பல்கலைக் கழகம் அங்ஙனம் வழங்காதது ஒரு பெருங்குறையே யாகும்.

> சமற்கிருதம் படித்து நூல்கள் எழுதுபவர்கள் பெரும் பொருள் ஈட்டினர் என்றும், தமிழைக் கற்றுத் தமிழ் நூல்கள் எழுதுபவர்கள் வறுமையிலேதான் உழல்கின்றன ரென்றும் டாக்டர் போப் அவர்களே கூறியுள்ளனர்:
>
> "His MAGNUM OPUS was of course his Translation of THIRUVACHAGAM.
>
> He wrote "I shall not derive any pecuniary profit whatsoever from the book "THIRUVACHAGAM" though scholars like MAX MULLER have been abundantly enriched as a reward for their Sanskrit studies. Tamil should not bring misfortune to those who study it."
>
> —Vide Siddhantha deepikai Vol. III No. II (1908).

டாக்டர் போப் திருவுருவம் பொறிக்கப்பெற்ற சிறப்பு அஞ்சற்றலை வெளிவருவதற்கு 1-9-1974 மிகவும் பொருத்த மான நாள். அவர் 88 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்து மறைவுற்றார். உலகப் பொதுமறையாம் திருக்குறளை 1-9-1886இல் பதித்து வெளியிட்டார். அவர் இவ்வுலகில் வாழ்ந்தபின் 1-9-1974இல் 88 ஆண்டுகள் நிரம்புவதால் அன்று, அவர் திருவுருவம் பொறிக்கப்பெற்ற சிறப்பு அஞ்சற்றலையினை வெளியிடுமாறு நடுவணரசுக்குத் தமிழறிஞர் பெருமக்களும் தமிழகவரசும் இன்றே இன்னே எழுதுதல் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இரண்டு வகைப் படங்கள் கழகப் படக்காட்சியிலே இருக்கின்றன. அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். 1-9-1974இல் வெளியிட இயலா தாயின் காலந்தாழ்த்தேனும் அவர் திருவுருவம் அஞ்சற்றலையில் வருதல் மிகமிக இன்றியமையாததாகும்.

சென்னை-1.
18-7-1974

வ. சுப்பையா
செயலாளர்

கலைத்தந்தை — கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள்

அறக்கொடையண்ணல், தொழில் மன்னர், செந்தமிழ்ப் புரவலர், சைவமெய்யன்பர், தனவைசியப் பெருமகனுர், கலைத் தந்தை உயர்திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் 29—7—1974 திங்கட்கிழமை காலை 7-30 மணி அளவில் திருக் குற்ருலத்தில் புலியருவிக்கு நீராடச் செல்லும்போது மாரடைப்பி ஞல் இறைவன் திருவடி நீழல் எய்தினுர். அவர்களுக்கு வயது 82.

வாழ்க்கைக் குறிப்பு :

செட்டியார் அவர்கள் 16—6—1893இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆ. தெக்கூரில் பிறந்தார். இளமையில் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயின்ருர். இவர் குடும் பத்தினர் இலங்கையில் துணிவாணிபம் செய்து வந்ததனல், பள்ளிப்படிப்பு முடிந்ததும் இலங்கை சென்று கல்லூரியில் பயின்று தேறினுர். கொழும்பில் நடைபெற்ற ''மார்னிங் லீடர்'' என்னும் ஆங்கில நாளிதழ் அலுவலகத்தில் பணி யாற்றினுர்.

இவர் தம் முதல் மனைவியார் பெயர் விசாலாட்சி ஆச்சியார் என்பது. அவர்க்குத் திரு. சுந்தரம் செட்டியார். (பி.காம்) திரு. மாணிக்க வாசகஞ் செட்டியார் (பி.ஏ) என்ற ஆண் மக்கள் இருவரும் திருமதிகள் சரசுவதி, உருக்குமணி, மீனுட்சி என்ற பெயருடைய பெண்கள் மூவரும் பிறந்தனர்.

முதல் மனைவியார் காலஞ் சென்றபின் திருமதி, இராதா அம்மையார் அவர்களை மணந்தனர். இவ்வம்மையார் பி.எஸ்ஸி; எம்.ஏ; என்னும் ஆங்கிலப் பட்டங்களைப் பெற்ருர். பின்பு மாணிக்கவாசகர் பற்றிய ஆராய்ச்சி செய்து நூல் எழுதி மதுரைப் பல்கலைக் கழகத்தில் (பிஎச்.டி) பண்டாரகர் (டாக்டர்) பட்டமும் பெற்ருர். இவருக்குத் திரு. கண்ணன் என்ற மகனும், செல்வி இலட்சுமி என்ற மகளும் உள்ளனர்.

நாட்டுப்பற்று :

நம்நாடு விடுதலையடையப் பாடுபட்ட தலைவர்களுள் செட்டியார் அவர்களும் ஒருவராவர். திரு லாலா லஜபதிராய், அன்னை பெசண்டு அம்மையார், காந்தியடிகள், முதலிய தலைவர் களுடன் நெருங்கிப் பழகியவர். காந்தியடிகளைத் தம் மில்லத்தி லேயே விருந்தினராக வைத்துப் போற்றியவர்.

தமிழ்ப்பற்று :

1939இல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொண்டு இந்தியை எதிர்த்தார்,

மாணவன்' என்று பொறிக்குமாறு கூறினர். "மறுவுலகினும் தமிழிலேயே தமிழறிஞர்களோடு பேசி மகிழ்வேன்" என்று பூரிப்போடு கூறியவர். அவர் தமிழ்த் தொண்டைப் பாராட்டி ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் 'டாக்டர் பட்டம்' வழங்கியதே யன்றிச் சென்னைப் பல்கலைக் கழகம் அங்ஙனம் வழங்காதது ஒரு பெருங்குறையே யாகும்.

சமற்கிருதம் படித்து நூல்கள் எழுதுபவர்கள் பெரும் பொருள் ஈட்டினர் என்றும், தமிழைக் கற்றுத் தமிழ் நூல்கள் எழுதுபவர்கள் வறுமையிலேதான் உழல்கின்றன ரென்றும் டாக்டர் போப் அவர்களே கூறியுள்ளனர்:

"His MAGNUM OPUS was of course his Translation of THIRUVACHAGAM.

He wrote "I shall not derive any pecuniary profit whatsoever from the book "THIRUVACHAGAM" though scholars like MAX MULLER have been abundantly enriched as a reward for their Sanskrit studies. Tamil should not bring misfortune to those who study it."

—Vide Siddhantha deepikai Vol. III No. II (1908).

டாக்டர் போப் திருவுருவம் பொறிக்கப்பெற்ற சிறப்பு அஞ்சற்றலை வெளிவருவதற்கு 1-9-1974 மிகவும் பொருத்த மான நாள். அவர் 88 ஆண்டுகள் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்து மறைவுற்றார். உலகப் பொதுமறையாம் திருக்குறளை 1-9-1886இல் பதித்து வெளியிட்டார். அவர் இவ்வுலகில் வாழ்ந்தபின் 1-9-1974இல் 88 ஆண்டுகள் நிரம்புவதால் அன்று, அவர் திருவுருவம் பொறிக்கப்பெற்ற சிறப்பு அஞ்சற்றலையினை வெளியிடுமாறு நடுவணரசுக்குத் தமிழறிஞர் பெருமக்களும் தமிழகவரசும் இன்றே இன்னே எழுதுதல் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இரண்டு வகைப் படங்கள் கழகப் படக்காட்சியிலே இருக்கின்றன. அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். 1-9-1974 இல் வெளியிட இயலா தாயின் காலந்தாழ்த்தேனும் அவர் திருவுருவம் அஞ்சற்றலையில் வருதல் மிகமிக இன்றியமையாததாகும்.

சென்னை-1.
18-7-1974

வ. சுப்பையா
செயலாளர்

கலைத்தந்தை — கருமுத்து
தியாகராசச் செட்டியார் அவர்கள்

அறக்கொடையண்ணல், தொழில் மன்னர், செந்தமிழ்ப் புரவலர், சைவமெய்யன்பர், தனவைசியப் பெருமகனார், கலைத் தந்தை உயர்திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் 29—7—1974 திங்கட்கிழமை காலை 7-30 மணி அளவில் திருக் குற்றாலத்தில் புலியருவிக்கு நீராடச் செல்லும்போது மாரடைப்பி னால் இறைவன் திருவடி நீழல் எய்தினார். அவர்களுக்கு வயது 82.

வாழ்க்கைக் குறிப்பு :

செட்டியார் அவர்கள் 16—6—1893இல் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆ. தெக்கூரில் பிறந்தார். இளமையில் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயின்றார். இவர் குடும் பத்தினர் இலங்கையில் துணிவாணிபம் செய்து வந்ததனால், பள்ளிப்படிப்பு முடிந்ததும் இலங்கை சென்று கல்லூரியில் பயின்று தேறினார். கொழும்பில் நடைபெற்ற "மார்னிங் லீடர்" என்னும் ஆங்கில நாளிதழ் அலுவலகத்தில் பணி யாற்றினார்.

இவர் தம் முதல் மனைவியார் பெயர் விசாலாட்சி ஆச்சியார் என்பது. அவர்க்குத் திரு. சுந்தரம் செட்டியார். (பி.காம்) திரு. மாணிக்க வாசகஞ் செட்டியார் (பி.ஏ) என்ற ஆண் மக்கள் இருவரும் திருமதிகள் சரசுவதி, உருக்குமணி, மீனாட்சி என்ற பெயருடைய பெண்கள் மூவரும் பிறந்தனர்.

முதல் மனைவியார் காலஞ் சென்றபின் திருமதி, இராதா அம்மையார் அவர்களை மணந்தனர். இவ்வம்மையார் பி.எஸ்ஸி; எம்.ஏ; என்னும் ஆங்கிலப் பட்டங்களைப் பெற்றார். பின்பு மாணிக்கவாசகர் பற்றிய ஆராய்ச்சி செய்து நூல் எழுதி மதுரைப் பல்கலைக் கழகத்தில் (பிஎச்.டி) பண்டாரகர் (டாக்டர்) பட்டமும் பெற்றார். இவருக்குத் திரு. கண்ணன் என்ற மகனும், செல்வி இலட்சுமி என்ற மகளும் உள்ளனர்.

நாட்டுப்பற்று :

நம்நாடு விடுதலையடையப் பாடுபட்ட தலைவர்களுள் செட்டியார் அவர்களும் ஒருவராவர். திரு லாலா லஜபதிராய், அன்னை பெசண்டு அம்மையார், காந்தியடிகள், முதலிய தலைவர் களுடன் நெருங்கிப் பழகியவர். காந்தியடிகளைத் தம் மில்லத்தி லேயே விருந்தினராக வைத்துப் போற்றியவர்.

தமிழ்ப்பற்று :

1939இல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொண்டு இந்தியை எதிர்த்தார்,

புலவர் ஏறு வரதநஞ்சைய பிள்ளையவர்களிடம் தமிழ் பயின்றவர். தமிழ்நாடு என்னும் நாளிதழை 18 ஆண்டுகள் நடத்தினர். அஃது இப்பொழுது வார இதழாக நடைபெறுகிறது.

சமயப்பற்று :

சைவசமயத்தில் ஆழ்ந்த பற்றுடைய இவர் தவருது திருநீறும் சந்தனமும் அணிவார். புலால் உணவை உண்ணுவ தில்லை. தம் ஆட்சி எல்லைக்குள் புலால் சமைத்தலும், உண்ணலும் ஆகாது எனக் கட்டளை பிறப்பித்திருந்தார். சிவன் கோவில்களில் சிறப்பான வழிபாடுகள் செய்யவும் திருமுழுக்கு முதலியன நடத்தவும் பெரும்பொருள் செலவிடுவது வழக்கம்.

கல்விக் கொடைகள் :

இரண்டு உயர்நிலைப்பள்ளிகளையும் இரண்டு கல்லூரிகளையும் தொடங்கி நடத்தி வருகிருர். பாலிடெக்னிக் முதலிய தொழிற் பள்ளிகளும் தொடங்கி நடத்திவரச் செய்துள்ளார்.

தொழில் முதல்வர் :

தொழில் துறையில் நாட்டை வளப்படுத்தினர். நூற்பு ஆலைகள், நெசவு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் பலவற்றைத் தொடங்கி நடத்தி வருகிருர். மதுரைப் பொருளகம் (பாங்கு) இவர்களால் தொடங்கப்பெற்றது. பல கிளைகளோடு இப்பொழுது நடந்து வருகிறது. தொழிலாளர்களின் நலங்களை யும் அவர்களின் குடும்பங்களின் நலங்களையும் நாடி அவர்கட்கு வேண்டுவனவற்றைத் தாராள மனத்தோடு உதவி வந்தார்.

கட்டிடங்களைக் கட்டுவதில் சிறந்த தேர்ச்சியும் நுண்ணிய கலையுணர்வும் உடையவர். இவருடைய கட்டிடக் கலையைப் புகழ்ந்து தலைவர் நேரு அவர்களே பாராட்டி வியந்தனர். தோட்டக் கலையிலும் சிறந்த தேர்ச்சியுடையவர். இத்தகைய வியத்தகு பேராற்றலும் பெருவண்மையும் நல்லறிவும் பெற்ற கலைத் தந்தையவர்கள் இறைவனடி சேர்ந்தமை யறிந்து தமிழகம் தாங்கொணுக் கவலையுறுகின்றது. கலைத் தந்தையின் புகழ் வாழ்க! அவர்தம் நோக்கங்கள் வளர்ந்து சிறப்பெய்துக.

கலைத்தந்தை கருமுத்து அவர்கள் வரலாறு செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 36 பரல் 4இல் விரிவாக வெளியிடப் பெற்றுள் ளது. மதுரை ஆலைத் தொழிலாளர் குடியிருப்பு நலக் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றிய உயர்திரு ஜி. கலி யாணம், எம். ஏ. அவர்களும், உயர்திரு கீ. இராமலிங்கனர் எம். ஏ. அவர்களும் எழுதியனுப்பிய வரலாற்றுக் குறிப்புக்கள் செல்வி அடுத்த இதழில் வெளியிடப் பெறும்.

திரு ஆ. இராசகோபால் பிள்ளை பிரிவு

கழக ஆட்சியாளர் இல்லக் கிழத்தியாரின் அண்ணனர் திரு. இராச கோபால் பிள்ளை பாளையங்கோட்டையில் திருவாளர் ஆண்டியப்ப பிள்ளையவர்கட்கும் திருவாட்டி சங்கரவடிவம்மையார்க்கும் பிறந்த இரண்டாவது மகனுராவர். இவருக்கு அண்ணன் ஒருவரும் தம்பியர் இருவரும் உளர். இவர் பாளையங் கோட்டை புனித சேவியர் உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வரை கல்வி பயின்று பின் ராலீசு இந்தியாவில் பல்லாண்டுகள் பணியாற்றி 1966இல் ஓய்வு பெற்றுர். ராலீஸ் இந்தியா பணி யாளர் சங்கத்தின் துணைச் செயலாளராக இருந்து நற்பணிகள் ஆற்றியவர். இவர்தம் முதல் மனைவியார் கலியாணியம்மாள் பிரிவுக்குப் பின் வள்ளியம்மை என் னும் அன்பு நங்கையைத் திருமணம் புரிந்தனர். இவருக்கு ஆண் மக்கள் இரு வரும் பெண் மக்கள் இருவரும் பிறந்தனர். மூத்தவர் கலியாணசுந்தரம் பி. எஸ்.ஸி. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் பொது மேலாளராகவும், இரண்டாவது மகன் திரு. மூத்துக்குமாரசாமி, எம். ஏ. பி. லிப். கழகத்தின் அறநிலையமாகிய மறைமலையடிகள் நூல்நிலையத்தின் நூலக ராகவும் பணி புரிந்து வருகின்றனர். மூத்தவர் ஆட்சியாளரின் மூத்த மகள் வடிவழகி என்னும் தமிழரசியையும், இளையவர் ஆட்சியாளரின் இளைய மகள் வயிரமணியையும் திருமணம் புரிந்து நன் மக்களைப் பெற்று இனிது வாழ்கின்றனர்.



இவர்கள் அருமைப் பேர்த்தி திருவளர் செல்வி க. வள்ளியம்மைக் குத் தன் தகுதியினுலேயே சென்னைப் பொது மருத்துவக் கல்லூரியிலே மருத்துவக் கல்விபெற இடங்கிடைக்கப் பெற்ற செய்தியினை 2-8-74இல் தெரிந்து கழிபேருவகை யடைந்தனர்.

திரு இராசகோபால் பிள்ளையவர்கள் தமக்கு ஏற்பட்டிருந்த குருதி அழுத்தத்தால் இரண்டு திங்கள் நலமின்றியிருந்து 4—8—74 ஞாயிறு பிற்பகல் தமது 71ஆவது அகவையில் இறையடி சேர்ந்தனர். தெய்வப் பற்று நிறைந்தவர். நாடோறும் முறையாகத் திருக்கோயில்கட்குச் சென்று வழிபாடு செய்வர். இவர்தம் ஆருயிர் இறையடியில் இன்ப அன்புற்றமர்க வென வாழ்த்துவோம்.

———

செய்திகளும் குறிப்புகளும்

பாவாணருக்குப் பாராட்டு விழா

*13—7—74*இல், சென்னை மாநகர மருத்துவக்கல்லூரி மாணவர்கள், கலைவாணர் அரங்கில் நடத்திய முத்தமிழ் மாநாட்டில், தமிழ் ஞாயிறு பண்டித புலவர் தேவநேயப் பாவாணர், எம். ஏ. அவர்கட்கு ஒரு பாராட்டுவிழா சீரும் சிறப்புமாக நடத்தினர். விழாவிற்குத் திரு. ஏ. எல். சீனிவாசன் தலைமை தாங்கினார். பாவாணர் அவர்களைப் பாராட்டித் தமிழ்ப் பேரறிஞர் பலர் உரையாற்றினர். முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் கவியரங்கு ஒன்று நடைபெற்றது. கவியரசு கண்ணதாசன் உட்படத் தமிழ்க் கவிஞர்கள் பலர் பல்வேறு தலைப்புகளில் தம் கவிதைகளை அரங்கேற்றினர். ஸ்டான்லி மருத் துவக்கல்லூரி மாணவர் இளங்கோ வரவேற்புரை நிகழ்த்தினார். பாவாணர் அவர்கட்கு டாக்டர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

மொழி நூல் அறிஞர் உயர்திரு. பாவாணர் அவர்கட்கு, முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆற்றிய உரையில் :

> ''பாவாணரவர்களுடைய தமிழாற்றலை, ஆராய்ச்சித்திறனை, அறிவு நுணுக்கங்களை, இந்தத் தமிழ்ச் சமுதாயம் பெற வேண்டும் என்பதற்காக அவரைப் பயன்படுத்தி ஒரு வேர்ச்சொல் அகர முதலியைத் தயாரிக்கும் பொறுப்பினை இந்த அரசு அவரிடம் ஒப்புடைத்துள்ளது'' என்று குறிப்பிட்டார். சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் திரு. பாலசுப்பிரமணியம் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

திரு. அ. திருமலை முத்துசாமி தங்கப் பதக்கம் பெற்றார்

சென்னைப் பல்கலைக் கழக நூலகவியல் துணைப் பேராசிரியரான திரு. அ. திருமலை முத்துசாமி, எம். ஏ., எம். லிட். பி. டி. அவர்கள் சென்ற கல்வியாண்டில் மைசூர் மாநிலத்திலுள்ள தார்வார் பல்கலைக் கழகத்தில் நூலக இயலில் முதுநிலைப்பட்டப் படிப்பிற்குச் சென்றிருந் தார். அதன் முடிவில் எம். லிப். எஸ்ஸி தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ந்து 'தங்கப் பதக்கம்' பெற்றுள்ளார். இப் பட்டப் படிப்புத் தொடங்கிய பின் முதல் இரண்டாண்டுகளில் யாரும் முதல் வகுப்பில் தேறவில்லை. திரு. முத்துசாமி அவர்கள்தாம் முதன் முறை யாக முதல் வகுப்பில் தேறியுள்ளார். அவருடைய வெற்றிக்கு எங்கள் உளங்கனிந்த பாராட்டுதல்கள். பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள அவர்கள் மேன்மேலும் பல பட்டங்களையும் சிறப்புக்களையும் பெற்று நீடுவாழ இறைவனை வேண்டுகிறோம்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் முதலாண்டு நினைவு விழா

28-6-74 மாலை, சென்னைத் தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன பிரசார நிலையத்தில், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், மறைந்த இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் முதல்

ஆண்டு விழா விழா நடைபெற்றது. இசைவாணர்களும், கலைத்துறை அன்பர்களும் இசையரசின் சிறப்புப்பற்றி அரிய சொற்பொழிவாற்றினர். திருமுறை அரங்கு, இசைக் கதை, இசையரங்கு ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்தி தொடர்பு மொழியாக வேண்டுமாம்!

30-6-74இல் சென்னையில் நடைபெற்ற தட்சிண பாரத இந்தி பிரசார சபையின் 37-வது ஆண்டு விழாவில் பேசிய, இந்திய அரசின் இந்தி ஆலோசகர் திரு. ஆர். பி. நாயக் என்பவர் இந்தியைத் தொடர்பு மொழியாக ஏற்றுக் கொள்வதால் வட்டார மொழி கெடாது என்றும் அதுதான் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழியாகவும் சிறந்த மொழியாகவும் உள்ளது என்றும், நாட்டு ஒருமைப்பாட்டிற்கு உகந்தது இந்திதான் என்றும் பேசியிருக்கிறார்.

வேலை பெறுத் தமிழ்ப் பட்டதாரிகள் துணை நிலையம்

தமிழகத்தில், தமிழ் பி. ஏ., பி. ஓ. எல்., எம். ஏ., எம். ஓ. எல்., ஆகிய பட்டங்கள் பெற்றும் வேலை வாய்ப்புக் கிட்டாமற் பலர் உளர். அத்தகையோர்க்கு வேலை தேடித்தர ஒரு பொதுக் குரல் தேவை என்பதை உணர்ந்து, "வேலை பெறுத் தமிழ்ப் பட்டதாரிகள் துணை நிலையம்" என்ற பெயரில் ஓர் அமைப்பினைக் காரைக்குடி தமிழ்ச் சங்கத்தார் உருவாக்கியுள்ளனர். வேலையின்றி இருக்கும் தமிழ்ப் பட்டதாரிகள் இச்சங்கச் செயலருக்கு ரூ 5 அனுப்பி தகவற் படிவம் பெற்று நிரப்பி 15-8-74க்குள் அனுப்பி வைக்குமாறு, தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்களும், செயலர் திரு. மா. அ. ஞானசேகர பாண்டியன் அவர்களும் அறிவிக்கின்றனர்.

"தமிழை அனைத்துலக மொழி என்று கூறல் வேண்டும்"

"நம்முடைய மொழிகளில் தமிழுக்கு மிகவும் மதிப்பான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழி வடக்கிற்கும் தெற்கிற்கும் முக்கிய தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. தமிழை அனைத்துலக மொழி என்று கூறவேண்டும். உலகின் பல பகுதிகளில் இன்று தமிழ் மொழி பேசப்படுவதால் இப்படிக் குறிப்படுவது பொருத்தமாகும்.

தமிழ் மொழியின் புகழ்மிக்க மரபு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு துவங்கியது. பரந்த உள்ளங்கொண்ட சங்க காலப் புலவர் ஒருவர்,

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"

என்று கூறியுள்ளார். திருவள்ளுவர் கூட,

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்று கூறியுள்ளார். இந்த மனிதப் பண்பு, விரிந்த உள்ளம் ஆகியன தமிழ் மரபின் உயிர் மூச்சாக இருந்து வந்துள்ளது என்று தமிழ், சமற்கிருதம் மற்றுமுள்ள இந்திய மொழிகள் பற்றிய ஆராய்ச்சி நிலையமொன்றிற்குச் சென்னையில் 18—7—74இல் அடிக்கல் நாட்டிய இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்பமை வி வி. கிரி அவர்கள் குறிப்பிட்டார்."

செய்திகளும் குறிப்புகளும்

பாவாணருக்குப் பாராட்டு விழா

13—7—74இல், சென்னை மாநகர மருத்துவக்கல்லூரி மாணவர்கள், கலைவாணர் அரங்கில் நடத்திய முத்தமிழ் மாநாட்டில், தமிழ் ஞாயிறு பண்டித புலவர் தேவநேயப் பாவாணர், எம். ஏ. அவர்கட்கு ஒரு பாராட்டுவிழா சீரும் சிறப்புமாக நடத்தினர். விழாவிற்குத் திரு. ஏ. எல். சீனிவாசன் தலைமை தாங்கினர். பாவாணர் அவர்களைப் பாராட்டித் தமிழ்ப் பேரறிஞர் பலர் உரையாற்றினர். முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் கவியரங்கு ஒன்று நடைபெற்றது. கவியரசு கண்ணதாசன் உட்படத் தமிழ்க் கவிஞர்கள் பலர் பல்வேறு தலைப்புகளில் தம் கவிதைகளை அரங்கேற்றினர். ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மாணவர் இளங்கோ வரவேற்புரை நிகழ்த்தினர். பாவாணர் அவர்கட்கு டாக்டர் கலைஞர் அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்.

மொழி நூல் அறிஞர் உயர்திரு. பாவாணர் அவர்கட்கு, முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னுடை போர்த்தி ஆற்றிய உரையில்:

> *“பாவாணரவர்களுடைய தமிழாற்றலை, ஆராய்ச்சித்திறனை, அறிவு நுணுக்கங்களை, இந்தத் தமிழ்ச் சமுதாயம் பெற வேண்டும் என்பதற்காக அவரைப் பயன்படுத்தி ஒரு வேர்ச்சொல் அகர முதலியைத் தயாரிக்கும் பொறுப்பினை இந்த அரசு அவரிடம் ஒப்புடைத்துள்ளது” என்று குறிப்பிட்டார். சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் திரு. பாலசுப்பிரமணியம் நன்றி நவில விழா இனிது முடிந்தது.*

திரு. அ. திருமலை முத்துசாமி தங்கப் பதக்கம் பெற்றார்

சென்னைப் பல்கலைக் கழக நூலகவியல் துணைப் பேராசிரியரான திரு. அ. திருமலை முத்துசாமி, எம். ஏ., எம். லிட். பி. டி. அவர்கள் சென்ற கல்வியாண்டில் மைசூர் மாநிலத்திலுள்ள தார்வார் பல்கலைக் கழகத்தில் நூலக இயலில் முதுநிலைப்பட்டப் படிப்பிற்குச் சென்றிருந்தார். அதன் முடிவில் எம். லிப். எஸ்ஸி தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ந்து ‘தங்கப் பதக்கம்’ பெற்றுள்ளார். இப் பட்டப் படிப்புத் தொடங்கிய பின் முதல் இரண்டாண்டுகளில் யாரும் முதல் வகுப்பில் தேறவில்லை. திரு. முத்துசாமி அவர்கள்தாம் முதன் முறையாக முதல் வகுப்பில் தேறியுள்ளார். அவருடைய வெற்றிக்கு எங்கள் உளங்கனிந்த பாராட்டுதல்கள். பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள அவர்கள் மேன்மேலும் பல பட்டங்களையும் சிறப்புக்களையும் பெற்று நீடுவாழ இறைவனை வேண்டுகிறோம்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் முதலாண்டு நினைவு விழா

28-6-74 மாலை, சென்னைத் தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன பிரசார நிலையத்தில், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில், மறைந்த இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் முதல்

ஆண்டு நினைவு விழா நடைபெற்றது. இசைவாணர்களும், கலைத்துறை அன்பர்களும் இசையரசின் சிறப்புப்பற்றி அரிய சொற்பொழிவாற்றினர். திருமுறை அரங்கு, இசைக் கதை, இசையரங்கு ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்தி தொடர்பு மொழியாக வேண்டுமாம்!

30-6-74இல் சென்னையில் நடைபெற்ற தட்சிண பாரத இந்தி பிரசார சபையின் 37-வது ஆண்டு விழாவில் பேசிய, இந்திய அரசின் இந்தி ஆலோசகர் திரு. ஆர். பி. நாயக் என்பவர் இந்தியைத் தொடர்பு மொழியாக ஏற்றுக் கொள்வதால் வட்டார மொழி கெடாது என்றும் அதுதான் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழியாகவும் சிறந்த மொழியாகவும் உள்ளது என்றும், நாட்டு ஒருமைப்பாட்டிற்கு உகந்தது இந்திதான் என்றும் பேசியிருக்கிறார்.

வேலை பெருத் தமிழ்ப் பட்டதாரிகள் துணை நிலையம்

தமிழகத்தில், தமிழ் பி. ஏ., பி. ஓ. எல்., எம். ஏ., எம். ஓ. எல்., ஆகிய பட்டங்கள் பெற்றும் வேலை வாய்ப்புக் கிட்டாமற் பலர் உளர். அத்தகையோர்க்கு வேலை தேடித்தர ஒரு பொதுக் குரல் தேவை என்பதை உணர்ந்து, "வேலை பெருத் தமிழ்ப் பட்டதாரிகள் துணை நிலையம்" என்ற பெயரில் ஓர் அமைப்பினைக் காரைக்குடி தமிழ்ச் சங்கத்தார் உருவாக்கியுள்ளனர். வேலையின்றி இருக்கும் தமிழ்ப் பட்டதாரிகள் இச்சங்கச் செயலருக்கு ரூ 5 அனுப்பி தகவற் படிவம் பெற்று நிரப்பி 15-8-74க்குள் அனுப்பி வைக்குமாறு, தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர். வ. சுப. மாணிக்கம் அவர்களும், செயலர் திரு. மா. அ. ஞானசேகர பாண்டியன் அவர்களும் அறிவிக்கின்றனர்.

"தமிழை அனைத்துலக மொழி என்று கூறல் வேண்டும்"

"நம்முடைய மொழிகளில் தமிழுக்கு மிகவும் மதிப்பான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழி வடக்கிற்கும் தெற்கிற்கும் முக்கிய தொடர்பினை ஏற்படுத்தியுள்ளது. தமிழை அனைத்துலக மொழி என்று கூறவேண்டும். உலகின் பல பகுதிகளில் இன்று தமிழ் மொழி பேசப்படுவதால் இப்படிக் குறிப்படுவது பொருத்தமாகும்.

தமிழ் மொழியின் புகழ்மிக்க மரபு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு துவங்கியது. பரந்த உள்ளங்கொண்ட சங்க காலப் புலவர் ஒருவர்,

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"

என்று கூறியுள்ளார். திருவள்ளுவர் கூட,

"ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்று கூறியுள்ளார். இந்த மனிதப் பண்பு, விரிந்த உள்ளம் ஆகியன தமிழ் மரபின் உயிர் மூச்சாக இருந்து வந்துள்ளது என்று தமிழ், சமற்கிருதம் மற்றுமுள்ள இந்திய மொழிகள் பற்றிய ஆராய்ச்சி நிலையமொன்றிற்குச் சென்னையில் 18—7—74இல் அடிக்கல் நாட்டிய இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்பமை வி வி. கிரி அவர்கள் குறிப்பிட்டார்."

"இரயில்வேயில்" இந்தி திணிப்பு

இரயில்வேத் துறையில் இந்தியை எப்படித் திணிப்பது என்பது பற்றி இரயில்வே அமைச்சர் எல். என். மிஸ்ரா தலைமையில் ஒரு குழு கூடி ஆராய்ந்தது. அதன் விளைவாக இரயில்வேத் தொழிலாளர்கள் தமது அன்றாட வேலையில் இந்தி மொழியை அதிகம் பயன்படுத்த ஊக்குவிப்பதென்றும் சிறந்த இந்திமொழி பெயர்ப்பாளர்கட்குப் பரிசு வழங்குவதென்றும், வட்டார இரயில்வே அலுவலர்கட்குக் கேடயம் வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

'தென்மொழி' இடமாற்றம்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தென்மொழி' என்னுந் தனித்தமிழ்த் திங்களிதழும், 'தமிழ்ச்சிட்டு' என்னும் தனித்தமிழ்ச் சிறுவர் கலை இதழும், கடலூர், (தெ. ஆ.) என்னும் முகவரியிலிருந்து 51, அருணாசல ஆசாரித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று 'தென்மொழி'யின் அமைச்சர் அறிவிக்கிறார்.

மதிப்புரை

பி. பி. சி. தமிழோசையில்....

[ஆசிரியர்: டாக்டர் பொற்கோ. வெளியிட்டோர்: தமிழ் நூலகம், 10 E பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18. விலை: ரூ. 1. 60]

இந்நூலாசிரியர் இலண்டன் பல்கலைக் கழகத்திலுள்ள கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கலைக் கழகத்தில் 1970-72ஆம் ஆண்டுகளில் பணியாற்றிய போது பி. பி. சி. நிறுவனத்தினர் வேண்டுகோட்கிசைந்து நிகழ்த்திய சில சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூல். இதில் தமிழ் மொழியின் மாண்புகள், தமிழரின் வாழ்க்கை நெறி ஆகிய செய்திகள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெரிவிக்கப்பெற்றுள்ளன.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரிதம்

[ஆசிரியர்: பண்டிதை அசலாம்பிகை அம்மையார். கிடைக்குமிடம்: 19, ஸ்டிரிங்கர்ஸ் ரோடு, சென்னை-1. விலை: ரூ. 1.]

அருட்பிரகாச வள்ளலாரின் வரலாற்றினைச் செய்யுள் வடிவில் யாத்துத் தருமாறு இந்நூலாசிரியர் அவர்களை அன்பர்கள் சிலர் வேண்டிக் கொண்டதற் கிணங்க உருப்பெற்றதே இந்நூல். இதில் அடிகளாரின் வரலாறு முழுமையும் செய்யுள் நடையில் பதின்மூன்று தலைப்புகளில் மிகத் தெளிவாக இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் சுவையும் பயனும் உடையது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக
சென்னை-600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

மதுரை இருபெரும் புலவர்கள்

—புலவர் இரா. இளங்குமரன்

மாம்பழக் கவிச்சிங்க நாவலரும், பேராசிரியர் கந்த சாமியார் அவர்களும் மங்காப் புகழுடைய மதுரை மாவட்டத் தைச் சேர்ந்தவர்கள். இவ்விருபெரும் புலவர்களின் வரலாறு கள் இந்நூலின்கண் மிகச் சுவைபட, அகச் சான்று புறச் சான்றுகளுடன் தொகுத்தெழுதப் பட்டுள்ளன. புலவர் பெருமக்களின் வரலாறுகளை அறிந்துகொள்ள விரும்பும் தமிழன்பர்கட்கும், வரலாற்று நூலாசிரியர், மாணவர் ஆகியோர்க்கும் பெரிதும் பயன்படத்தக்கது. ரூ. 4 00

கம்பராமாயணம் - பாலகாண்டம் உரை

(முதல் ஐந்து படலங்கள்)

—உரையாசிரியர் : சு. அ. இராமசாமிப் புலவர்

காவியச் சுவை நிரம்பிய கம்பராமாயணம் அனைவரும் படித்தின்புற வேண்டியதொன்று. அதிலும், வித்துவான் பட்டம் பெற விழைவோர் படித்துணர வேண்டிய அரிய இலக்கியமாகும். பால காண்டத்தின் முதல் ஐந்து படலங்கள்புலவர் பட்டம் பெறுவோர் மட்டுமேயன்றித் தமிழ்ப் பற்றுளர் அனைவரும் படித்து இன்புறுதற் கேற்ற வண்ணம் அமைந்துள்ளது.

ரூ. 5 00

திருவாசகம் - திருச்சதகம் உரை

—பொழிப்புரை: சித்தாந்த பண்டிதர் ப. இராமநாத பிள்ளை

— குறிப்புரை : இராவ்சாகிப் கு. கோதண்டபாணிப்பிள்ளை

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் ஒரு பகுதி யாகிய திருச்சதகம் பத்திச்சுவை நிறைந்தது - பொருட் செறிவுடையது. புலவர் பட்டம் பெறுவோர்க்குப் பயன்படும் வகையில் பதிப்பிக்கப் பட்டுள்ளது. ரூ. 1 75

திருவாசகம்-நீத்தல் விண்ணப்பம்

—புலவர் ந. ரா. முருகவேள், எம். ஏ., பி. ஓ. எல்.

திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய நீத்தல் விண்ணப்பம் பொழிப்புரை, விளக்கவுரைகளுடன் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆங்கில முன்னுரையுடனும் வெளிவந்துள்ளது. ரூ. 4 00

பெருந்தொகை (முதல் ஐம்பது செய்யுட்கள்)

—உரையாசிரியர் :- புலவர் இரா. இளங்குமரன்

புலவர் பலர் பல்வேறு காலங்களில் பாடிய தனிப்பாடல் களின் தொகுதியும், பண்டை இலக்கண இலக்கிய உரை நூல் களில் மேற்கோள்களாக எடுத்தாளப் பெற்றவையுமான பாடல் களே பெருந்தொகை எனப்படுவது. இப் பாடல்களின் சுவை நயங்கருதி முதல் ஐம்பது செய்யுட்கள் வித்துவான் வகுப்பு இறுதிநிலைத் தேர்வுக்குப் பாடமாக அமைக்கப்பட்டுள்ளன.

ரூ. 2 75

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் வெளியீடுகள்

அப்பர் அச்சகம், சென்னை-600 001.